பக்கங்கள் : பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 ஆவணி 09 வியாழக்கிழமை (25.08.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :272

## யுத்தநிறுத்தத்தை நடைமுறைப்படுத்துவது பற்றிய

# பேச்சுக்களை வெளிநாட்டில் நடத்துவதற்கு அரசு எதிர்ப்பு

## நோர்வே ஊடாக புலிகளுக்கு அறிவிப்பு

கொழும்பு, ஓகஸ்ட் 25

**போர்நிறுத்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை முழு அளவில் நடைமுறைப்படுத்துவது குறித்த பேச்சுகளை நாட்டுக்கு வெளியே - வெளிநாடொன்றில் - நடத்துவதற்கு இலங்கை அரசு இணங்க மறுத்துள்ளது. இது தொடர்பான அரசின் கருத்து நோர்வே அனுசரணையாளர்களுக்குத் தெரியப் படுத்தப்பட்டு விட்டதாக ஏஜென்ஸி செய்திகள் தெரிவித்தன.**

**பேச்சுகளை உள்நாட்டில் நடத்தினால் தமது உயர்மட்ட உறுப்பினர்களுக்குப் பாதுகாப்பில்லை என்று புலிகள் கருதுகின்றனர். இதனால், வெளிநாடொன்றில் - இரு தரப்பினரும் இணங்கும் நாடொன்றில் - பேச்சுகளை நடத்துவதையே அவர்கள் விரும்புகின்றனர்.**

போர் நிறுத்த ஒப்பந்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவது குறித்து நோர்வே விடுத்த அழைப்பை விடுதலைப் புலிகள் ஏற்றிருந்தனர். பேச்சுகளுக்கு இருதரப்பினரும் இணங்கியுள்ளனர் என்று நோர்வே தெரிவித்தது. இடமும் திகதியுமே குறிக்கப்பட வேண்டியுள்ளன என்றும் அது கூறியது.

(16ஆம் பக்கம் பார்க்க)

## இனப்பிரச்சினைத் தீர்வுக்கான புதிய கொள்கை பிரதமரின் தேர்தல் அறிக்கையில் வெளியாகும்

கொழும்பு, ஓக. 25

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்கான சுதந்திரக் கட்சியின் தேர்தல் அறிக்கையில் இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பில் புதிய கொள்கையொன்றை அறிவிப்பதற்கு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தீர்மானித்துள்ளார் எனத் தெரியவருகிறது.

இனப்பிரச்சினை விடயத்தில் வடக்கு - கிழக்கு மற்றும் மலையகத் தமிழர்கள் ஏற்றுக் கொள்ளக் கூடிய சாத்தியமான தீர்வு ஒன்றை முன்வைப்பதற்காக உயர் மட்டக்குழு ஒன்றையும் பிரதமர் நியமித்திருக்கிறார்.

இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பில் முன்னதாக இரு பிரதான கட்சிகளாலும் அறிவிக்கப் பட்டிருக்கும் கொள்கைகளுக்கு அப்பால்

(16ஆம் பக்கம் பார்க்க)

## ஐரோப்பிய ஒன்றிய ஆணையருடன் தமிழ்க் கூட்டமைப்பினர் நேற்று சந்திப்பு

கொழும்பு, ஓக.25

பொதுக்கட்டமைப்பை நடைமுறைப்படுத்துவது மற்றும் போர்நிறுத்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தை செம்மையாகக் கடைப்பிடிப்பது என்பன சம்பந்தமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நேற்று ஐரோப்பிய ஒன்றிய ஆணையாளர் வூட்டர் வில்சன், பிரிட்டிஷ் தூதுவர் ஸ்ரீவன் இவான்ஸ் ஆகியோருடன் பேச்சு நடத்தியிருக்கிறது.

கொழும்பிலுள்ள பிரிட்டிஷ் தூதரகத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது. இலங்கையின் தற்போதைய அரசியல் சூழ்நிலை குறித்து இந்தப் பேச்சுகளின்போது விரிவாக ஆராயப் பட்டிருக்கிறது.

பொதுக்கட்டமைப்பு ஒப்பந்தத்தினை கிரமமாக நடைமுறைப்படுத்தவேண்டியதன் அவசியம், கொலைகளைத் தடுத்துநிறுத்த வேண்டியதன் தேவை என்பன குறித்தும் தமிழ்க் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்தச் சந்திப்பின்போது வலியுறுத்தி

(16ஆம் பக்கம் பார்க்க)

## வெளிவிவகார அமைச்சர் இன்று டில்லி விஜயம்

கொழும்பு, ஓக.25

வெளிவிவகார மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் அநுரா பண்டாரநாயக்க உத்தியோக பூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு இன்று புதுடில்லி செல்லவுள்ளார்.

அங்கு இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங், காங்கிரஸ் தலைவி சோனியா காந்தி, வெளிவிவகார அமைச்சர் நட்வர் சிங் ஆகியோரை அமைச்சர் அநுரா பண்டாரநாயக்க சந்திப்பதற்கு ஏற்பாடாகியுள்ளது.

அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் மறைவையடுத்து புதிய வெளிவிவகார அமைச்சராகப் பொறுப்பேற்றுக்கொண்ட அநுரா பண்டாரநாயக்க தனது முதல் வெளிநாட்டுப் பயணமாக இந்தியாவிற்கு விஜயம் செய்கின்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-க)

### மணற்காட்டில் நேற்று

## படைமுகாமை முற்றுகையிட்டு மீனவர்கள் மறியற்போராட்டம்

கரவெட்டி ஓக,25

மணற்காட்டில் நேற்று படையினரின் முகாமை முற்றுகையிட்ட மீனவர்கள் மறியற்போராட்டம் ஒன்றை நடத்தியுள்ளனர்.

படையினரால் கைது செய்யப்பட்டதாகக் கூறப்படும் மீனவ இளைஞர்கள் இருவரை விடுவிக்குமாறு கோரியே அவர்கள் இந்த மறியற் போராட்டத்தை நடத்தியதாகக் கூறப்பட்டது. கடந்த ஞாயிறன்று மணற்காட்டுப் பகுதியில் கடற்றொழிலுக்குச் சென்ற மீனவ இளைஞர்கள் இருவர் காணாமற்போயிருந்தனர். அதே இடத்தைச்சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையாரான மைக்கல்பிள்ளை வின்ரனிராஸ் (வயது-22) ஒரு பிள்ளையின் தந்தையான ராசையா ரூபன் (வயது-25) ஆகிய

(16ஆம் பக்கம் பார்க்க)

## போக்குவரத்துச் சபை சட்டமூலம் குறித்து உயர் நீதிமன்றின் கருத்து ஜனாதிபதிக்கு!

கொழும்பு, ஓக. 25

இலங்கை போக்குவரத்துச் சபையை மீண்டும் கட்டியெழுப்புவதற்காகத் தயாரிக்கப் பட்டுள்ள சட்டமூலம் அரசமைப்பிற்கு உட்பட்டதா என்பதை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க உயர் நீதிமன்றத்திடம் கேட்டுள்ளார். இது தொடர்பாக பிரதம நீதியரசர் சரத் என். சில்வாவுக்கு அவர் அவசரக் கடிதம் ஒன்றையும் எழுதியுள்ளார். இதனை அடுத்து நேற்று அந்த மனு மூன்று நீதியரசர்கள் கொண்ட குழு முன் ஆராயப்பட்டது.

விசாரணைகள் நேற்று முடிந்ததை அடுத்துத்

(16ஆம் பக்கம் பார்க்க)

## ஊடகவியலாளர்களைத் தாக்கும் உரிமை ஜே.வி.பிக்கு கிடையாது

### சுதந்திர ஊடகவியலாளர் ஒன்றியம் காட்டமான அறிக்கை

கொழும்பு,ஓக.25

'சுடர் ஒளி' பத்திரிகையாளர் மீது கடந்த செவ்வாய்க்கிழமை ஜே.வி.பி. உறுப்பினர்கள் நடத்திய தாக்குதலை வன்மையாகக் கண்டித்திருக்கிறது சுதந்திர ஊடக இயக்கம். ஊடகவியலாளர்கள் மீது தாக்குதலை நடத்துவதற்கான எந்த உரிமையும், அருகதையும் ஜே.வி.பியினருக்கு இல்லையென்றும் அது தெரிவித்துள்ளது.

செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற தாக்குதல் குறித்து சுதந்திர ஊடக இயக்கம் நேற்று அறிக்கையொன்றை விடுத்தது. அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

ஜே.வி.பியின் ஆர்ப்பாட்டம் தொடர்பான செய்திகளைச் சேகரிப்பதற்குச் சென்ற 'சுடர் ஒளி' பத்திரிகையின் செய்தியாளர் பிரேமச்சந்திரன் யதுர்ஷன் கடுமையாகத் தாக்கப்பட்டதையும் -

அதன்பின் பொலீஸாரிடம் அவர் ஒப்படைக்கப்பட்டதையும் - சுதந்திர ஊடக இயக்கம் வன்மையாகக் கண்டிக்கின்றது.

பொலீஸார் தலையிட்டிருக்காவிட்டால் சிலவேளை தாக்குதலுக்குள்ளானவரின் உயிருக்கே ஆபத்து ஏற்பட்டிருக்கலாமென்று தாக்குதலை நேரில் கண்டவர்கள் சுதந்திர ஊடக இயக்கத்திற்குத் தெரிவித்தனர்.

தான் பத்திரிகையாளரென்பதை உரக்கக் கூறியபோதும் அதனை செவிமடுக்காத ஜே.வி.பி.

(16ஆம் பக்கம் பார்க்க)

## செய்தியாளரைத் தாக்கிய ஜே.வி.பியினரை கைதுசெய்யுமாறு பொலீஸாருக்கு பணிப்பு!

### கோட்டை நீதிவான் நேற்று வழங்கினார்

கொழும்பு, ஓக.25

'சுடர் ஒளி' பத்திரிகையின் செய்தியாளரைத் தாக்கி, அவரிடமிருந்த பெறுமதிமிக்க பொருள்களை அபகரித்த நபர்களை கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்துமாறு கோட்டை பிரதம நீதிவான் சரத் கருணாரட்ன நேற்று கோட்டைப் பொலீஸாருக்கு உத்தரவிட்டார்.

நேற்றுமுன்தினம் ஜே.வி.பியினர் கோட்டையில் நடத்திய ஆர்ப்பாட்டம் தொடர்பான செய்திகளைச் சேகரிக்கச் சென்ற 'சுடர்

(16ஆம் பக்கம் பார்க்க)

## செய்தியாளர் தாக்கப்பட்டதற்கு அரசாங்கம் கடும் கண்டனம்

'சுடர் ஒளி' செய்தியாளர் தாக்கப்பட்ட சம்பவத்தை வன்மையாகக் கண்டித்துள்ளது அரசு. இவ்வாறு அநாகரிகமானதும் மோசமானதுமான நடவடிக்கைகளின் ஊடக சுதந்திரத்தைக் காக்கும் எவரும் ஈடுபடக் கூடாதென்றும் அரசு வலியுறுத்தியிருக்கின்றது.

'சுடர் ஒளி' செய்தியாளர் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக ஊடகத்துறை பிரதியமைச்சர் டிலான் பெரேரா அரசின் சார்பில் நேற்று மாலை அறிக்கையொன்றை விடுத்தார். அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

சுதந்திர ஊடகத்துறையை கட்டியெழுப்பு

(16ஆம் பக்கம் பார்க்க)

## சமாதான செயலக அதிகாரிகள் நேற்று யாழ். வந்தனர்

யாழ்ப்பாணம், ஓக.25

அரச சமாதான செயலகத்தைச் சேர்ந்த அதிகாரிகள் இருவர் நேற்று யாழ். விஜயம் செய்து முக்கிய சந்திப்புக்களை முடித்துக்கொண்டு நேற்றையதினமே கொழும்பு திரும்பியுள்ளனர் எனத் தகவல் ஒன்று தெரிவித்தது.

யாழ். கோயில் வீதியில் உள்ள போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் அலுவலகத்துக்குச் சென்ற இந்த அதிகாரிகள் கண்காணிப்புக்

(16ஆம் பக்கம் பார்க்க)

# பொலீஸாரின் அதிகாரங்களைக் கையில் எடுத்து காட்டுமிராண்டித்தனமாகச் செயற்படுகிறது ஜே.வி.பி.

## இராதாகிருஷ்ணன் எம்.பி. நாடாளுமன்றில் சீற்றம்

பொலீஸாரின் அதிகாரங்களைக் கையில் எடுத்துக்கொண்டு ஜே.வி.பியினர் காட்டுமிராண்டித்தனமாகச் செயற்படுகின்றனர். அதற்கு அவசரகாலச் சட்டமும் துணை போகின்றது எனக் கண்டனம் தெரிவித்தார் மலையக மக்கள் முன்னணி உறுப்பினரான பெ. இராதா. கிருஷ்ணன் எம்.பி. இந்தச் சமயத்தில் ஜே.வி.பியினர் சபையில் இருந்த போதும் எந்தவித மறுப்பும் தெரிவிக்கவில்லை.

வாஷிங்ரன் கூற்றுத் தொடர்பான சபை ஒத்திவைப்புவேளை விவாதத்திலேயே இராதாகிருஷ்ணன் எம்.பி. இதனைத் தெரிவித்தார்.

தொடர்ந்து உரையாற்றிய இராதாகிருஷ்ணன் எம்.பி. மேலும் கூறியதாவது:-

ஜே.வி.பியினர் இன்று எல்லோரையும் கறுப்புக் கண்ணாடியைப் போட்டுக்கொண்டே பார்க்கின்றனர். அவர்களுடைய கண்களுக்கு பச்சைப்புலி, வெள்ளைப்புலி, கறுப்புப் புலிகள்தான் தெரிகின்றார்கள்.

கோட்டை ரயில் நிலையத்தின் முன் நடைபெற்ற ஜே.வி.பியினரின் ஆர்ப்பாட்டங்களைப் புகைப்படமெடுக்கச்சென்ற 'சுடர் ஒளி' செய்தியாளரை ஜே.வி.பியினர் மிருகத்தனமாகத் தாக்கியுள்ளனர். காட்டுமிராண்டிகள்போல் அவருடைய ஆடைகளையும் களைந்துள்ளனர்.

அடையாள அட்டை இல்லை என்ற காரணத்தால் இவர் தாக்கப்பட்டுள்ளார். அவர் மீது பயங்கரவாத சாயம் பூசப்பட்டுள்ளது. அவரது கமரா, செல்போன், அவருடைய மணிபேர்ஸ் எல்லாம் ஜே.வி.பியினரால் சூறையாடப்பட்டுள்ளன.

எவர் மீதாவது சந்தேகம் ஏற்பட்டால் அதனைப் பொலீஸாரிடம் தெரிவிக்க வேண்டும். பொலீஸார் நடவடிக்கை எடுப்பார்கள். ஆனால், ஜே.வி.பியினருக்கு பொலீஸாரின் அதிகாரங்களை வழங்கியது யார்?

"சுடர் ஒளி" பத்திரிகையாளர் யதுர்ஷனை நானும் எங்கள் தலைவர் சந்திரசேகரனும் நேற்றுமுன்தினம் இரவு கோட்டை பொலீஸ் நிலையத்தில் சென்று சந்தித்தோம். அவர் கடுமையாகத் தாக்கப்பட்டுள்ளார் என்பதை நேரடியாகத் தெரிந்துகொண்டோம். தாக்கப்பட்டவர் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார், தாக்கியவர்கள் சுதந்திரமாக வெளியே நடமாடுகின்றனர். யதுர்ஷனைத் தாக்கியவர்களின் புகைப்படங்கள் எல்லாப் பத்திரிகைகளிலும் வெளியாகியுள்ளன. இதனை ஆதாரமாகக்கொண்டு சம்பந்தப்பட்டவர்களைப் பொலீஸார் கைது செய்யவேண்டும்.

இன்று நடைமுறையில் இருக்கும் அவசரகாலச் சட்டம் முற்று முழுதாகத் தமிழர்களை அடக்கி ஒடுக்குவதற்காகவே பயன்படுத்தப்படுகின்றது. இதனாலேயே நாம் ஆரம்பம்முதல் அவசரகாலச் சட்டத்தை எதிர்த்துவந்துள்ளோம்.

இந்த நாட்டில், அடுத்த ஜனாதிபதித் தேர்தல் 2005 ஆம் ஆண்டிலேயே நடத்தப்படவேண்டும் என்று சாதாரண பாமர மக்களும் கூறுகின்றனர். அதுதான் உண்மையும்கூட. அதனைச் சர்வதேச ஜனநாயக சங்கம் கூறிவிட்டது என்பதால் அரச தரப்பினர் இந்த அமைப்பையே திட்டித்தீர்க்கின்றனர். அதேவேளை, 2006 ஆம் ஆண்டுதான் ஜனாதிபதித் தேர்தலை நடத்தவேண்டும் என்று கூறியிருந்தால் சர்வதேச ஜனநாயகச் சங்கத்தைப் பாராட்டி வரவேற்றிருப்பார்கள் என்பதில் சந்தேகம் இல்லை. அதுதான் இந்த அரசின் கொள்கை - என்றும் இராதாகிருஷ்ணன் எம்.பி. கூறினார். (எ-க)

# சாவகச்சேரி இந்துவின் நூற்றாண்டுப் பெருவிழா

தென்மராட்சி,ஓக.25

சாவகச்சேரி இந்துக் கல்லூரி (தேசிய பாடசாலை) நூற்றாண்டுப் பெருவிழா நாளை வெள்ளிக்கிழமை பி.ப. 4.30 மணிக்குக் கல்லூரி சுப்பிரமணியம் திறந்த அரங்கில் நடைபெறும்.

கல்லூரி அதிபர் அ.கயிலாயபிள்ளை தலைமையில் நடைபெறும் இவ்விழாவில், முதன்மை விருந்தினராக யாழ். அரச அதிபர் க.கணேஸ் கலந்துகொள்வார்.

நிகழ்வில் கல்லூரி நூற்றாண்டு விழா சிறப்பு மலர் வெளியீடும் இடம்பெறும். வெளியீட்டு உரையினை யாழ். பல்கலைக்கழக ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி நிலையப் பணிப்பாளர் பேராசிரியர் அ.சண்முகதாஸ் நிகழ்த்துவார். (எ-117)

# நோயாளருக்கு உதவிப் பொருள்கள்

தென்மராட்சி,ஓக.25

சாவகச்சேரி ஆஸ்பத்திரி நோயாளர்களுக்கு வழங்கவென தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினர் சுமார் ஒன்றரை லட்சம் ரூபா பெறுமதியான பொருள்களை வழங்கியுள்ளனர்.

150 படுக்கை விரிப்புகள், 100 சாரங்கள், 75 துபாய்கள், குழந்தைகளுக்கான மருந்துப் பொருள்கள், நுளம்புத்திரிகள், மருந்துவகைகள் போன்றவை வழங்கப்பட்டன.

தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பொறுப்பாளர் எஸ்.ஜெயராஜ் இப் பொருள்களை நேற்று ஆஸ்பத்திரியில் டாக்டர் ச.அம்பிகைபாகனிடம் கையளித்தார். (எ-117)

# தென்மராட்சியில் விபத்து; நேற்றுமட்டும் 4பேர் காயம்!

தென்மராட்சி,ஓக.25

தென்மராட்சியில் நேற்று விபத்துக்களில் சிக்கி நான்குபேர் காயமடைந்தனர்.

மோட்டார் சைக்கிளிலிருந்து தூக்கி வீசப்பட்டுக் காயமடைந்த சாவகச்சேரி சண்முகம் வீதியைச் சேர்ந்த நடராசா வசீதரன் (வயது-27), சாவகச்சேரி சிவன் கோயிலடியைச் சேர்ந்த திருநாவுக்கரசு திருக்குமரன் (வயது-30)-

வீதியின் குறுக்கே ஓடிய நாயுடன் மோட்டார் சைக்கிள் சக்கரம் மோதியதில் தூக்கி வீசப்பட்டுக் காயமடைந்த கல்வயலைச்சேர்ந்த வ.வசீகரன்(வயது-20)-

வீதியோரத்தில் கட்டப்பட்டிருந்த மாடு வீதியின் குறுக்கே சென்றதால் கயிற்றில் மோட்டார் சைக்கிள் சிக்கி தூக்கிவீசப்பட்டுக் காயமடைந்த மட்டுவிலைச் சேர்ந்த த.நிர்மலா (வயது-23) ஆகியோரே இவ்வாறு காயமடைந்தவர்களாவர்.

காயமடைந்தவர்கள் அனைவரும் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர். பின்னர் தி.திருக்குமரன் என்பவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். (எ-117)

# பரீட்சை எழுதவிடாது தடுத்ததுபற்றி மனிதஉரிமைக் குழுவிடம் முறைப்பாடு

யாழ்ப்பாணம்,ஓக.25

ஐந்தாம்தரப் புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றுவதற்காகச் சென்ற தனது மகன் வேண்டும் என்றே காலம் தாழ்த்திப் பரீட்சை எழுத அனுமதிக்கப்பட்டுள்ளார் என்று தெரிவித்து தந்தை ஒருவர் மனிதஉரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்திருக்கிறார்.

நகரில் உள்ள பிரபல ஆரம்பப் பாடசாலை ஒன்றைச் சேர்ந்த மாணவனே இவ்வாறு பாடசாலை நிர்வாகத்தினால் நேரம் தாழ்த்திப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட்டார் என்று முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாடசாலைக்கு ஒழுங்காக வருகை தராததைக் காரணம் காட்டியே அந்த மாணவனைப் பாடசாலை நிர்வாகத்தினர் பரீட்சை எழுத அனுமதிக்கவில்லை என்றும் -

பின்னர் தந்தையாரின் தலையீட்டை அடுத்து நேரம் கடந்துவிட்ட பிறகு அவர் பரீட்சை எழுத அனுமதிக்கப்பட்டார் என்றும் - முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

தாமதமாகப் பரீட்சைக்குச் சென்றதால் தமது மகன் உளரீதியான தாக்கத்துக்குட்பட்டிருக்கிறார் என்று தனது முறைப்பாட்டில் அச் சிறுவனின் தந்தை சுட்டிக்காட்டியுள்ளார். (ஐ-ரி-12)

# புலமைப் பரிசில் பரீட்சை எழுதவிடாது பல சிறுவர்கள் தடுக்கப்பட்டனர்!

## நகரப் பாடசாலையில் நடந்த அதிர்ச்சிச் சம்பவம்

யாழ்ப்பாணம், ஓக.25

கடந்த சனியன்று நடைபெற்ற 5ஆம் தர மாணவர்களுக்கான புலமைப் பரிசில் பரீட்சையின்போது யாழ். நகரப் பகுதியில் உள்ள பிரபல ஆரம்பப் பாடசாலை ஒன்றில் பல சிறுவர்கள் பரீட்சை எழுதவிடாது தடுக்கப்பட்டிருக்கின்றனர் என்ற அதிர்ச்சித் தகவல் தற்போது வெளியாகியிருக்கின்றது.

இது தொடர்பாகப் பெற்றோர்கள் தரப்பில் இருந்து கிடைத்த முறைப்பாடுகள் குறித்துக் கல்வி அதிகாரிகள் விசாரணை நடத்தியிருக்கின்றனர்.

மாணவர்களைப் பரீட்சை எழுதவிடாது தடுத்த விவகாரம் சட்டப்படி குற்றச்செயல் என்றும், சிறுவர்களின் அடிப்படை உரிமைகளை அப்பட்டமாக மீறுகின்ற நடவடிக்கை இது என்றும் கல்வி அதிகாரிகள் சுட்டிக்காட்டியிருக்கின்றனர்.

இதே பாடசாலையைச் சேர்ந்த மாணவி ஒருத்தியின் பெற்றோர் செய்த முறைப்பாட்டை அடுத்து அந்தப் பாடசாலையின் அதிபருடன் தொடர்புகொண்டு விசாரணை நடத்தப்பட்டிருப்பதாக யாழ். வலயக் கல்விப்பணிப்பாளர் தி.செல்வரட்ணம் தெரிவித்தார்.

அதே பாடசாலையைச் சேர்ந்த வேறு ஒன்பது சிறுவர்கள் வரை இவ்வாறு பரீட்சை எழுதவிடாமல் தடுக்கப்பட்டிருக்கின்றனர் என்ற தகவல் இந்த விசாரணைகளின் மூலம் தெரியவந்திருப்பதாகவும், அவர் கூறினார். இதனை சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபர் ஒப்புக்கொண்டிருக்கிறார் என்றும் கல்விப் பணிப்பாளர் உதயனுக்குத் தெரிவித்தார்.

குறிப்பிட்ட மாணவர்கள் அனைவருமே கல்வி நிலையில் மிகவும் கீழ் மட்டத்தில் இருந்ததால்தான் பரீட்சை எழுத அவர்களை அனுமதிக்கவில்லை என பாடசாலை அதிபர் காரணம் கூறியிருக்கின்றார் என்றும் அறியவந்தது.

எனினும், எந்த ஒரு மாணவனையும் பொதுப் பரீட்சை ஒன்றில் தோற்றவிடாது தடுப்பது அப்பட்டமான உரிமை மீறல் என்பதுடன், சட்டப்படி குற்றச்செயலும் ஆகும் - என்றும் கல்விப்பணிப்பாளர் தெரிவித்தார்.

இதுபோன்ற செயல்கள் எதிர்காலத்தில் இடம்பெறக்கூடாது என்று சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபர் எச்சரிக்கப்பட்டிருக்கிறார் எனவும் தெரிவிக்கப்பட்டது.

மாணவர்கள் பரீட்சைக்கு அனுமதிக்கப்படாதது குறித்த தகவல் தமக்கு முன்கூட்டியே தெரியவந்திருந்தால் கல்வி அமைச்சுடன் தொடர்புகொண்டு கடைசி நேரத்திலாவது நடவடிக்கை எடுத்து அவர்கள் பரீட்சை எழுத ஏற்பாடு செய்திருக்கமுடியும் என்றும் கல்விப்பணிப்பாளர் உதயனுக்குத் தெரிவித்திருக்கிறார்.

மிகுந்த எதிர்பார்ப்புடன் கல்விகற்ற தமது பிள்ளைகள் பரீட்சை எழுதவிடாது தடுக்கப்பட்டதால் ஏமாற்றமும் சீற்றமும் அடைந்துள்ள பெற்றோர்கள் அதிபரின் இந்த நடவடிக்கையை ஆட்சேபித்து சிறுவர் நலன்பேணும் அமைப்புகளிடமும் ஏனைய சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடமும் முறைப்பாடுகளைச் செய்திருக்கின்றனர்.

இதேவேளை -

தமது பிள்ளைகளுக்கு இழைக்கப்பட்ட இந்த அநீதி குறித்துப் பெற்றோர்கள் தரப்பில் உதயனுக்குச் செய்யப்பட்ட முறைப்பாடுகளை அடுத்து, அது குறித்து நேரில் அறிவதற்காக 'உதயன்' செய்தியாளர் ஒருவர் நேற்று குறிப்பிட்ட பாடசாலை அதிபரைச் சந்தித்துக் கருத்துக் கேட்டார். எனினும், கருத்து எதனையும் வெளியிட அவர் மறுத்துவிட்டார்.

"இது குறித்துப் பத்திரிகைக்கு எதுவும் கூறத் தயாராயில்லை. வேண்டுமானால் வலயக்கல்விப் பணிப்பாளரிடமோ அல்லது விடுதலைப் புலிகளின் யாழ். - நல்லூர் கோட்ட அரசியல்துறைப் பொறுப்பாளரிடமோ சென்று கேளுங்கள்" என்று கூறிச் செய்தியாளரைத் திருப்பி அனுப்பிவிட்டார் அந்த அதிபர். (ஐ-13)

# பழைய மிலேச்சத்தனத்திற்கு புத்துயிர் கொடுக்கிறது ஜே.வி.பி.

## ஐ.தே.க. கண்டனம்

கொழும்பு, ஓக. 25

'சுடர் ஒளி' பத்திரிகையாளர் ஜே.வி.பியினரால் தாக்கப்பட்டதை வன்மையாகக் கண்டித்திருக்கிறது ஐக்கிய தேசியக் கட்சி. இதன் மூலம் பழைய மிலேச்சத்தனத்திற்கு ஜே.வி.பி. புத்துயிர் கொடுத்திருப்பதாக கட்சியின் பிரதிப் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க விடுத்துள்ள அறிக்கையொன்றில் கூறியுள்ளார். அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

மனிதருக்கிருக்கும் தகவல்களைத் தெரிந்து கொள்வதற்கான தார்மீக உரிமைக்குப் பங்கம் ஏற்படுத்துவது நாகரிகம் அல்ல. இவ்வாறு பங்கம் ஏற்படுத்தியவர்கள் மக்களின் நன்மதிப்பைப் பெறமுடியாமற்போயினர் என்பதை வரலாறு சுட்டிக்கட்டுகின்றது.

ஜே.வி.பியின் ஆர்ப்பாட்டமொன்றின் செய்திகளைச் சேகரிப்பதற்காகச் சென்ற 'சுடர் ஒளி' செய்தியாளரைத் தாக்கியதன் மூலம் தமது பழைய மிலேச்சத்தனத்திற்கு ஜே.வி.பியினர் புத்துயிர் அளித்திருக்கின்றனர்.

உலகமே வெறுக்கும் இனவாதத்தை சமயமாகக் கொண்டுள்ள ஜே.வி.பி தோழர்கள், வார்த்தைகளில் மட்டும் வரையறுக்கப்பட்ட தமது சகோதரத்துவத்தை மறந்து இந்த மோசமான செயலில் ஈடுபட்டதை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம். இந்தத் தாக்குதலுடன் அண்மையில் 'சுடர் ஒளி' யின் கிளை அலுவலகம் மீதான தாக்குதல் பற்றியும் நாம் சந்தேகம் கொள்ள வேண்டியுள்ளது.

ஜனநாயகத்தின் வேடமிட்டுக் கொண்டிருந்த ஜே.வி.பியினர் இப்போது அதனைக் கழற்றிவிட்டு மனிதநேயமற்ற நாடகத்திற்குத் தயாராகிறார்கள் என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது. இவ்வாறான வேடதாரிகளிடமிருந்து அவதானமாக இருக்குமாறு நாம் மக்களை வேண்டுகிறோம். - இவ்வாறு அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ-க)

# துணிச்சல்மிக்க பத்திரிகைகளுக்கான அச்சுறுத்தல் நிறுத்தப்படவேண்டும்

துணிச்சல்மிக்க பத்திரிகைகளுக்கு விடுக்கப்படும் அச்சுறுத்தல்கள் உடன் நிறுத்தப்படவேண்டும்.

இவ்வாறு சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை விடுத்துள்ள செய்திக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

'சுடர் ஒளி - உதயன்' பத்திரிகை அலுவலகங்கள் மீது கைக்குண்டு வீசப்பட்ட சம்பவத்தினை நாம் கண்டிக்கின்றோம். நேற்றுமுன்தினம் 'சுடர் ஒளி' செய்தியாளர் ஜே.வி.பியினரால் கண்மூடித்தனமாகத் தாக்கப்பட்டுள்ளார். தொடர்ந்து இப் பத்திரிகைகள் மீது திட்டமிட்டே தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

துணிந்து நின்று உண்மைகளை உலகுக்கு கொண்டுவருகின்ற பத்திரிகையின் சுதந்திரம் பாதுகாக்கப்பட வேண்டும். பறிக்கப்படக்கூடாது. கடந்த சில ஆண்டுகளுக்கு முன்னர் 'உதயன்' பத்திரிகை தடை செய்யப்பட்டிருந்தது. இன்றுவரை அப்பத்திரிகை மீது அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டுவருகின்றன. இதன் ஒரு அங்கமாகவே அண்மைய சம்பவங்கள் இருக்கின்றன. இவ்வாறான துணிச்சல் மிக்க பத்திரிகைகளுக்கு விடுக்கப்படும் அச்சுறுத்தல்கள் உடன் நிறுத்தப்படவேண்டும் - என்றுள்ளது. (எ)

# பத்திரிகைச் சுதந்திரத்தை மீறுகின்ற செயல்

யாழ்ப்பாணம்,ஓக.25

'சுடர் ஒளி' பத்திரிகையின் செய்தியாளர் தாக்கப்பட்டமையானது ஜனநாயக நாட்டில் பத்திரிகைச் சுதந்திரத்தை மீறும் செயலாகும்.

- இவ்வாறு தெரிவித்துள்ளது யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம். இது விடயமாக மேற்படி ஒன்றியம் விடுத்துள்ள செய்திக்குறிப்பில்:-

கடந்த 23.08.2005 அன்று கொழும்பு கோட்டைப்பகுதியில் ஜே.வி.பியினரால் ஒழுங்குபடுத்தப்பட்ட ஆர்ப்பாட்டப் பேரணி தொடர்பான செய்தி சேகரிக்கச் சென்ற - தமிழினத்துக்கு குரல்கொடுக்கின்ற பத்திரிகைகளுள் ஒன்றான 'சுடர் ஒளி' பத்திரிகையின் செய்தியாளர் ஒருவர் ஜே.வி.பியின் ஆதரவாளர்களால் கடுமையாகத் தாக்கப்பட்டுள்ளார். அத்துடன், கையடக்கத் தொலைபேசியும், செய்தி சேகரிப்பு உபகரணங்களும் பறிமுதல் செய்யப்பட்டமையானது ஜனநாயக நாட்டில் பத்திரிகைச் சுதந்திரத்தை மீறுகின்ற செயலாகும்.

நிமலராஜன், நடேசன், சிவராம் போன்ற பத்திரிகையாளர்கள் படுகொலையும் செய்யப்பட்டுள்ளனர். அத்துடன், 'உதயன் -சுடர் ஒளி' அலுவலகங்கள் கடுமையாகத் தாக்கப்பட்டுள்ளன. இச் சம்பவங்களானது ஊடகச் சுதந்திரத்தையும், ஜனநாயகத்தையும் மீறுகின்ற செயலாகும். இதை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம் - என்று அதில் உள்ளது. (எ)

# நடுநிலை நின்று எழுதும் ஊடகவியலாளரை நசுக்குவதற்கு முயலக்கூடாது

யாழ்ப்பாணம் ஓக,25

நடுநிலை நின்று எழுதும் ஊடகவியலாளர்களை நசுக்க முயலாதீர். அது பெரும் மக்கள் எதிர்ப்புச் சக்தியாக உருவெடுக்கும். - இவ்வாறு தெரிவித்துள்ளது இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம். இதுவிடயமாக மேற்படி சங்கம் விடுத்த செய்திக் குறிப்பு வருமாறு:-

கொழும்பு கோட்டைப் புகையிரத நிலையத்திற்கு முன்னால் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டம் தொடர்பாக செய்திகளைச் சேகரிக்கச் சென்ற 'சுடர் ஒளி' பத்திரிகையின் செய்தியாளர் பிரேமச்சந்திரன் யதுர்ஷன் ஜே.வி.பியினரால் மிக மோசமாகத் தாக்கப்பட்டு அவரது வீடியோ கமெரா, கையடக்கத் தொலைபேசி என்பனவற்றை பலாத்காரமாக பறித்தமை மிகவும் பாரதூரமான செயல் என இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் மிக வன்மையாகக் கண்டிக்கின்றது.

உண்மைச் சம்பவத்தை மிகவும் துணிகரமாகவும், ஆணித்தரமாகவும் எழுதுவதோடு மட்டுமல்லாது தமிழ் மக்களின் இதயம் கவர்ந்த 'உதயன் - சுடர்ஒளி' பத்திரிகையின் செய்தியாளருக்கு இத்தகைய சம்பவம் நடைபெற்றமை ஊடகவியலாளர்களின் சுதந்திரத்தையும் அவர்கள் சுதந்திரமான கருத்துக்களைத் தெரிவித்து வந்தமை மிகவும் ஒரு பாதுகாப்பற்ற சூழலுக்கு கொண்டு சென்றுள்ளது.

ஊடகங்கள் மீதும் ஊடகவியலாளர்கள் மீதும் செய்யப்படும் இந்தகைய மனிதத்தன்மையற்ற செயல்களினால் பத்திரிகை சுதந்திரத்தை மழுங்கடிக்கலாம் என நினைக்கும் அரசியல்வாதிகளுக்கு நாம் இதய சுத்தியோடு தெரிவித்துக்கொள்ள விரும்புவது என்னவென்றால், மக்கள் எதிர்பார்க்கும் உண்மைச் செய்திகளை ஜனநாயக ரீதியில் நடுநிலையாக நின்று எழுதும் ஊடகவியலாளர்களை நசுக்க முயலாதீர்கள். அது பெரும் மக்கள் எதிர்ப்புச் சக்தியாக உருவெடுக்கும் - என்றுள்ளது. (எ)

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

# பொலீஸ் கடமை ஜே.வி.பியினரிடமா?

தமிழ் ஊடகத்துறையும் தமிழ் ஊடகவியலாளர்களும் தமது மக்கள் நலன்கருதிப் பணியாற்றுவதற்கான, உண்மையைச் சொல்லக்கூடியதான சூழ்நிலை தோற்றுவிக்கப்பட வேண்டும் - என்ற கருத்து எழுதப்பட்ட மை காய்வதற்கு முன்னர் -

''சுடர் ஒளி''யின் பத்திரிகையாளரை ஜே.வி.பியினர் அடித்து உதைத்திருக்கிறனர்; கடுமையாகத் தாக்கியது மட்டுமன்றி, அவரது புகைப்படக் கருவி, கைத்தொலைபேசி என்பவற்றையும் பறித்தெடுத்துள்ளனர்.

கொழும்பில் புதன்கிழமை ஜே.வி.பியினர் நடத்திய ஆர்ப்பாட்ட நிகழ்வில் ஊடகவியலாளராகத் தமது பணியைச் செய்வதற்காக அங்கு சென்றவரே சம்பந்தப்பட்ட இளைஞர். அவர் தமது பணியைக் கண்ணும் கருத்துமாகச் செய்துகொண்டிருந்த வேளையில் ஜே.வி.பி. ஆதரவாளர்கள் அவரை வெகு கொடூரமாகத் தாக்கியுள்ளனர்.

பொலீஸார் தலையிட்டிருக்காவிடில், ஆர்ப்பாட்டக்காரர்களின் தாக்குதலால் அந்த ஊடகவியலாளர் உயிரிழக்க நேர்ந்திருக்கும் என்று நேரில் பார்த்தவர்கள் தெரிவித்திருக்கிறார்கள்.

தமது ஆர்ப்பாட்டத்தைப் படம்பிடித்து, அது குறித்த தகவல்களைச் செய்தியாக்கி அதனை மக்கள் அறியும் பொருட்டு பத்திரிகைக்கு வழங்க இருந்த ஓர் ஊடகவியலாளரையே மோசமாகத் தாக்கி இம்சை செய்திருக்கிறார்கள் என்றால், அது எதனால்?

அந்த இளைஞன் ஒரு தமிழர். தமிழ் மக்களுக்காக, அவர்களின் உரிமைக்காக குரல்கொடுக்கும் 'சுடர் ஒளி'ப் பத்திரிகையின் செய்தியாளர் - என்பதாலேயே ஜே.வி.பியினர் ஆவேசம் கொண்டிருக்கிறார்கள். வெறியர்களாக மாறியிருக்கிறார்கள்.

தகவல் திணைக்களம் வழங்கும் அடையாள அட்டையை அந்தப் பத்திரிகையாளர் வைத்திருக்கவில்லை என்பதனை ஒரு சாட்டாக வைத்து, அவரை மோசமாக, மனிதாபிமானம் சிறிதும் இல்லாது காட்டுமிராண்டித்தனமாக தாக்கியமை எல்லாவகைகளிலும் மிகவும் கண்டிக்கப்பட வேண்டியதாகும்.

கிளர்ச்சிக்காரர், பயங்கரவாதிகள் என்ற தோற்றத்தை விட்டெறிந்து தாம் ஜனநாயகவாதிகளாகிவிட்டதாகக் கூறும் ஜே.வி.பியினர், ஓர் ஊடகவியலாளர் மீது தமது இனவெறியைக் கொட்டியிருப்பது ஒரு செய்தியைத் தெளிவாகவே சொல்கிறது.

அவர்கள் நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகி ஜனநாயகவாதிகளாகக் காட்டிக்கொண்டாலும் அவர்களது சுயகுணம் மாறவில்லை என்ற செய்தியே அதுவாகும்.

''சுடர் ஒளி''யின் செய்தியாளர் அனுமதி இல்லாமல் வந்தவர், ஊடகவியலாளர் என்ற அடையாளம் இன்றி வந்தவராகக் கருதியிருப்பின், தமது உடன்பாட்டின்மையைப் பவ்வியமாகக் கூறி அவரை நிகழ்வு நடந்த இடத்தை விட்டுச்செல்லுமாறு கூறியிருக்கலாம்.

அல்லது அங்கே குழுமியிருந்த பொலீஸாரிடம் விடயத்தைத் தெரிவித்து அவர்களின் நடவடிக்கைக்கென ஒப்படைத்திருக்கலாம். ஆனால், ஜே.வி.பியினரோ தாங்களே பொலீஸாராகியது மட்டுமன்றி, ஓர் இளம் ஊடகவியலாளரை மோசமாகத் தாக்கியுள்ளனர். அதனால், அவர்கள் ஜனநாயகவாதிகளா என்ற சந்தேகத்தைத் உண்டாக்கியுள்ளனர்.

மேலும் -

பத்திரிகை அலுவலகம் மீதான தாக்குதலை அங்கீகரிக்கிறீர்களா என்று டாக்டர் ஜயலத் ஜெயவர்த்தன, நாடாளுமன்றத்தில் கேட்டதற்கு, ஜே.வி.பி. சார்பில் அதன் உறுப்பினர் அனுரகுமார திஸநாயக்க பதிலளிக்கவில்லை. மௌனம் சம்மதத்துக்கு அறிகுறி. ஊடகத்துறையும், ஊடகவியலாளர்களும் தாக்கப்படுவதை ஆதரிப்பதாக அந்த மௌனத்தின் மூலம் சமிக்ஞை வந்த அதே நாளிலேயே தமிழ் ஊடகவியலாளரும் அவர்களால் தாக்கப்பட்டிருக்கிறார்!

ஜனநாயகவாதிகள் என்று கூறிக்கொள்பவர்கள், ஊடக சுதந்திரத்தை ஆதரிப்பவர்களாக, அதற்கு மதிப்பளிப்பவர்களாக, ஊடகவியலாளர்கள் சுதந்திரமாகச் செயற்பட ஊக்கமளிப்பவர்களாக இருக்கவேண்டும். மாற்றுக் கருத்துகளைத் தெரிந்துகொள்வதில் அக்கறை உள்ளவர்களாகவும் அரசியல் பண்பாடு உள்ளவர்களாகவும் இருப்பதுவும் மிக அவசியம்.

ஜனநாயகத்தின் செயற்படுதளமான நாடாளுமன்றத்தில் அதிக ஆசனங்களைப் பெற்று ஆட்சிக்கட்டிலில் அமர வேண்டும் என்ற ஆசை பெரிதும் உள்ள ஒரு தரப்பார், காடையர்களாக மாறுவதோ, பொலீஸ் கடமைகளைச் செய்வதற்கு முனைவதோ எந்தவிதத்திலும் பொருத்தமானது அல்ல.

விடுதலைப் புலிகள் மீது வக்கிரம் கொண்டவர்கள் என்பதற்காகத் தமிழ் இளைஞர்கள் எல்லோரையும் எதிரிகளாகப் பார்ப்பது அரசியல் நெறியும் அல்ல; யுக்தியும் அல்ல.

பத்திரிகைச் சுதந்திரத்தைப் பேணுவது தவறு அல்லது அது வேண்டாதது என்று நினைப்பவர்கள், மக்களுக்குத் தொண்டு செய்யப் புறப்பட்டுவிட்டதாகக் கூறுவது வெறும் ''பம்மாத்து'' என்ற முடிவுக்கே வகைசெய்யும்.

ஜனநாயக நீரோட்டத்துக்குள் குதித்துவிட்டதாகக் கூறும் ஜே.வி.பியினர், ஆட்சியில் அமரவேண்டும் என்று ஆசைப்படும் ஜே.வி.பியினர், மக்களின் குரல்களாக விளங்கும் ஊடகங்களையும், ஊடகவியலாளர்களையும் எதிரிகளாகப் பார்க்கும் வரை, தமது அரசியல் ஆசையைச் செவ்வனே எய்தமுடியாது. இனிமேலாவது இதனை நன்றாக உணர்வது அவர்களுக்கு நல்லது. ''தீதும் நன்றும் பிறர்தர வாரா; நேதலும் தணிதலும் அவற்றோ ரன்ன'' என்ற சங்க காலத் தமிழ்ப்புலவர் கணியன் பூங்குன்றனாரின் தத்துவத்தை அவர்கள் உய்த்து உணர்வது எப்போது?

# வடக்கு - கிழக்கிலுள்ள பாடசாலைகளில் 2,436 பட்டதாரிகளுக்கு நிரந்தர நியமனம்

## அடுத்தமாதம் முதல் வழங்க கல்வியமைச்சு நடவடிக்கை

யாழ்ப்பாணம்,ஓக.25

வடக்கு - கிழக்கு மாகாணப் பாடசாலைகளில் நிலவும் பட்டதாரி ஆசிரியர்கள் பற்றாக்குறையினை நீக்கக் கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

அடுத்தமாதம் முதலாம் திகதியில் இருந்து இரண்டாயிரத்து 436 பட்டதாரி ஆசிரியர்கள் நிரந்தர நியமனம் பெறவுள்ளதாக மாகாணக் கல்வியமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

வடக்கு - கிழக்கு மாகாண பாடசாலைகளில் நிலவிவரும் பட்டதாரி ஆசிரியர்களின் பற்றாக்குறையை நீக்குவதற்குத் தற்போது பயிற்சிப் பட்டதாரிகளாகக் கடமையாற்றிவருபவர்களிலிருந்து இவர்கள் தெரிவுசெய்யப்படுவார்கள்.

அண்மையில் இடம்பெற்ற போட்டிப் பரீட்சை அடிப்படையில் நேர்முகப்பரீட்சைக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் தெரிவுசெய்யப்பட்டவர்களுக்கு இந்த நியமனம் வழங்கப்படவுள்ளது.

பட்டதாரி ஆசிரியர் நியமனம் பெறுபவர்களில் ஆயிரத்து 896 தமிழ்மொழி மூலப் பட்டதாரிகளும் 540 சிங்கள மொழிமூலப் பட்டதாரிகளும் உள்ளடக்கப்படுவார்கள்.

இவர்கள் அனைவரும் வடக்கு - கிழக்கு மாகாணத்தில் உள்ள கஷ்ட மற்றும் அதிகஷ்டப் பிரதேசங்களில் ஐந்து ஆண்டுகள் தொடர்ச்சியாகக் கடமையாற்றவேண்டும் என்ற நிபந்தனையுடனேயே நியமனம் செய்யப்படவுள்ளனர்.

இதேவேளை, வடக்கு - கிழக்கு மாகாணத்தில் உள்ள மத்திய மகாவித்தியாலயம், மகாவித்தியாலயம் போன்றவற்றில் திட்டமிடல் உதவியாளர்களாகவும் நிதி உதவியாளர்களாகவும் 720 பட்டதாரிகள் அடுத்தமாதம் முதலாம் திகதியிலிருந்து நியமனம் பெறவுள்ளனர் எனக் கல்வி அமைச்சின் செயலாளர் ஆர்.தியாகலிங்கம் தெரிவித்துள்ளார். (8-152)

# மட்டு., அம்பாறை மக்கள் மீது அதிரடிப்படையினர் கெடுபிடி

## கண்காணிப்புக் குழுவிடம் புலிகள் முறைப்பாடு

யாழ்ப்பாணம்,ஓக.25

அவசரகாலச் சட்டம் நடைமுறைக்கு வந்துள்ளதை அடுத்து அதிரடிப்படையினரால் மட்டு., அம்பாறை பிரதேச மக்கள் பல்வேறு நெருக்கடிகளுக்குள்ளாக்கப்பட்டு வருகின்றனர் என்று விடுதலைப் புலிகளின் அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் தயாமோகன் யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் முறையிட்டுள்ளார்.

இலங்கை யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவினருடன் புலிகளின் அம்பாறை மாவட்ட அரசியல்துறை அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் தயாமோகன் பேச்சு நடத் தினார்.

புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளான தங்கவேலாயுதபுரம், ருபஸ், கஞ்சிகுடிச்சாறு ஆகிய பிரசேத மக்கள் காஞ்சிரங்குடா மற்றும் தாண்டியடி விசேட அதிரடிப்படையினரின் சோதனைச் சாவடிகளில் அச்சுறுத்தப்பட்டு வருகின்றனர் என்று தயாமோகன் கண்காணிப்புக்குழுப் பிரதிநிதிகளிடம் சுட்டிக்காட்டினார்.

மேற்படி கிராமங்களுக்குச் சென்ற யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் அங்குள்ள மக்களைச் சந்தித்து நிலைவரங்களைக் கேட்டறிந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (9)

# ஆழிப்பேரலையால் பெற்றோரை இழந்த சிறுவர்கள் 5,785 பேர்!

## சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை அறிக்கையில் தெரிவிப்பு

காரைதீவு,ஓக.25

ஆழிப்பேரலை அனர்த்தம் காரணமாக நாட்டில் 5 ஆயிரத்து 785 சிறுவர்கள் பெற்றோரை இழந்துள்ளதாகத் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை அறிவித்துள்ளது.

இதில் 3 ஆயிரத்து 689 சிறுவர்கள் வடக்கு - கிழக்குப் பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்றும் 2 ஆயிரத்து 96 சிறுவர்கள் மேற்கு மற்றும் தெற்குப் பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்றும் தெரிய வந்துள்ளது.

இந்தச் சிறுவர்களில் 3 ஆயிரத்து 219 பேர் தந்தையையும், ஆயிரத்து 874 பேர் தாயையும், 692 பேர் தாய் தந்தை ஆகிய இருவரையும் இழந்துள்ளனர் எனச் சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உரிய அனுமதியின்றி எந்தவொரு சிறுவர் இல்லமும் ஆதரவற்ற சிறுவர்களை வைத்திருக்க முடியாதெனவும் இந்தச் சிறுவர்களைப் பராமரிப்பதாயின் உரிய பதிவுகள் மேற்கொள்ளப்படவேண்டுமெனவும் இவற்றைச் செய்யத் தவறுவது தண்டனைக்குரிய குற்றமெனவும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (8-84)

### உதயவாக்கு

உறுதியுடன் இரு. அதற்கு மேலாகத் தூய்மையாகவும் முழு அளவில் சிரத்தை உள்ளவனாகவும் இரு.

-சுவாமி விவேகானந்தர்.

### நாளை

ஆவணி 10
வெள்ளிக்கிழமை
26.08.2005
திதி: ஸப்தமி
பிற்பகல்: 01.56 வரை
நட்சத்திரம்: கார்த்திகை
பின்னிரவு: 03.07 வரை
கார்த்திகை விரதம்
சுபநேரம்: 06.05 - 07.35
ராகுகாலம்: 10.35 - 12.05
(யாவும் பழைய நேரப்படி)

# நல்லூர் ஆலய வீதிகளை அசுத்தம் செய்யாதீர்கள்!

## சிறப்புச் செயலணி கோரிக்கை

வலி.வடக்கு,ஓக.25

நல்லூர் ஆலய உற்சவத்திற்கு வரும் அடியார்கள் ஆலய வீதிகளை அசுத்தம் செய்யாதவகையில் நடந்துகொள்ள வேண்டும் என வேண்டுகோள் ஒன்றைச் சிறப்புச் செயலணியினர் பொது மக்களுக்கு விடுத்துள்ளனர்.

ஆலய வீதியில் அங்கப்பிரதிட்சை செய்யும் இடம் துப்புரவாகவும் சுகாதாரமாகவும் இருக்கவேண்டும். இந்த வகையில் பாதணிகளுடன் அப்பகுதியில் நடமாடுவதால் வேறு இடங்களில் இருந்து பாதணிகள்மூலம் நோய்க் கிருமிகளைக் கொண்டுவரக்கூடிய சந்தர்ப்பமும் காணப்படுகின்றது. அத்துடன், ஆலய வீதிகளில் உமிழ்வதனால் கிருமித்தொற்று ஏற்படவாய்ப்புண்டு. அடியார்களால் உபயோகிக்கப்படும் பொருள்களின் கழிவுகளும் அப்பகுதிகளில் இடப்படுகின்றன. இதுவும் சுகாதாரச் சீர்கேட்டை ஏற்படுத்தியுள்ளது.

இதன்காரணமாக அங்கப்பிரதிட்சை செய்யும் அடியார்கள் பாதிப்படையக் கூடிய வாய்ப்புகள் காணப்படுகின்றன.

ஆகவே, அங்கப்பிரதிட்சை செய்யும் ஆலய வீதியில் (மணல் பறிக்கப்பட்ட பகுதியில்) பாதணிகளுடன் எவரையும் நடமாடவேண்டாம் எனவும் -

உமிழும்போதும், கழிவுப் பொருள்களை வீசுவதற்கும் அதற்கென இடப்பட்டுள்ள கூடைகளைப் பயன்படுத்துமாறும் - அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பாதணிகளுடன் வருபவர்கள் அவற்றை ஆலய வீதி தவிர்ந்த ஏனைய இடங்களில் கழற்றி வைக்கும்படியும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுவாமி வீதிஉலா முடிந்த பின்னரும் வீதிகளில் பாதணிகளுடன் நடமாடுவதையும் தவிர்த்துக்கொள்ளுமாறும் வேண்டப்பட்டுள்ளது. (9-86)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்



வவுனியாவில் நடைபெற்ற மாகாண மட்ட மெய்வன்மைப் போட்டியில் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி மாணவன்

**அ.அன்ரன் றஜீம்றாஜ்**

400 மீ.போட்டியில் முதலாம் இடமும் நீளம் பாய்தல், முப்பாய்ச்சல் போட்டியில் இரண்டாம் இடத்தையும் பெற்று வெற்றிக் கேடயத்தைப் பெற்று கொண்டதையிட்டு பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**யாங்கென்றீசியன் வி.க.**
இளவாலை.

(39259)(26-14-13)

## பாவித்த உருக்கு மரத்தளபாடங்கள் ஏல விற்பனை

*பாவித்த உருக்கு மரத்தளபாடங்கள், சைக்கிள் உதிரிப்பாகங்கள், தட்டெழுத்து இயந்திரங்கள் ஆகிய பொருள்கள் 2005.08 .28 ஆம் திகதி காலை 10 மணிக்கு இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ் . கிளை முன்றிலில் ஏலவிற்பனை செய்யப்படும். மேற்படி பொருள்களை ஏலத்தில் பெற்றுக்கொள்பவர்கள் அவற்றிற்குரிய பெறுமதியில் அரைவாசியை உடன் பணமாகச் செலுத்தவேண்டும். மிகுதிப் பணத்தை மூன்று நாள்களுக்குள் செலுத்திய பின் பொருள்களை எடுத்துச் செல்ல வேண்டும்.*

**கிளை நிறைவேற்று உத்தியோகத்தர்,**
**இ.செ.ச.73, கண்டி வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(சி/44765)(32-14-13-26)

## கண்ணீர் அஞ்சலி

*யா/ செம்பியன்பற்று அ.த.க.பாடசாலை ஆசிரியை*
**செல்வி அருணகிரி ஜெயந்தினியின்** *பாசமிகு தந்தை*

**வேலுப்பிள்ளை அருணகிரி**

அவர்களின் மறைவையொட்டித் துயருற்றிருக்கும் அவர் தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

**அதிபர்,**
**ஆசிரியர்கள்,**
**மாணவர்கள்.**

**யா/செம்பியன்பற்று அ.த.க.பா.,**
**செம்பியன்பற்று.** *(சி/44766)(26.14.13)*

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் *14 - 08 - 1934*

மறைவு *25 - 08 - 2003*

**அமரர் எஸ்.பி.ஜெயசிங்கம்**

(ஓய்வுபெற்ற குருவானவர்)


**உடைந்த உள்ளத்தாற்கு அருகில்**
**ஆண்டவர் இருக்கின்றார்**
**நைந்த நெஞ்சத்தாரை அவர்**
**காப்பாற்றுகின்றார்.**
திருப்பாடல் 34:18

ஏழாலை வடக்கு,
ஏழாலை.

(39264)(26-14-15)

**மனைவி.**

## 45 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



*அன்னை மடியில் 09 - 01 - 1972*

*இறைவன் அடியில் 12 - 07 - 2005*

**அமரர் சுப்பிரமணியம் அருணகிரிநாதன்**

*(ராசன்)*

கடந்த 12-07-2005 செவ்வாய்க்கிழமை அகால மரணமடைந்த எங்கள் அன்புத் தெய்வம் அமரர் சுப்பிரமணியம் அருணகிரிநாதன் (ராசன்) அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (25.08.2005) வியாழக்கிழமை 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

ஞானவைரவர் கோயிலடி,
கோப்பாய் வீதி,
உரும்பிராய்.

(39261)(26-14-13)

**மனைவி,**
**பிள்ளைகள்.**

## FOR RENT HOUSE IN THIRUNELVELY JAFFNA

**Five bedrooms, two attached bathrooms house, partly furnished with modern facilities.**
**Pantry and domestic helper room, toilet etc.**
**Prefer NGOs**
**Tele No: 011-2500070 (After 5 p.m.)**
**0777-513016**

(C/44763) (21.

## தேவை

வைத்திய நிலையத்தில் தங்கி நின்று நிர்வாகம் செய்யக்கூடிய, குடும்பப் பொறுப்புகள் இல்லாத பெண் ஒருவர் தேவை. நேரில் வரவும்.

**சம்பந்தர் மொடேர்ண் கிளினிக்**
8, இராமையாச் செட்டியார் வீதி
*(அமுல் கிறீம் ஹவுஸ் அருகே),*
யாழ்ப்பாணம்.

(392690)

# திருமணம் செய்வதாகக் கூறி 53 பெண்களிடம் மோசடி!

கொழும்பு,ஓக.25

திருமணம் செய்து வெளிநாட்டுக்கு அழைத்துச் செல்வதாக ஆசை காட்டி இளம் பெண்களிடம் இருந்து பணம், நகை என்பவற்றை மோசடி செய்து வந்தார் என்று கூறப்படும் இளைஞர் ஒருவரைப் பொலீஸார் மடக்கியுள்ளனர். குறிப்பிட்ட நபர் இவ்வாறு 53 இளம் பெண்களை ஏமாற்றியுள்ளார் என்றும் பொலீஸார் தெரிவித்தனர்.

ஐரோப்பிய நாடு ஒன்றில் இருந்து விடுமுறையில் இலங்கைக்குத் தான் திரும்பியிருக்கிறார் என்றும் -

தனக்கு நல்ல உயர் குடும்பத்திலிருந்து திருமணத்திற்குப் பெண் தேவை என்றும் - சிங்களப் பத்திரிகைகளில் விளம்பரம் செய்துள்ளார் குறிப்பிட்ட இளைஞர்.

அந்த விளம்பரத்தைப் பார்த்து விண்ணப்பித்தவர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தி அவர்களைத் திருமணம் செய்து வெளிநாடு அழைத்துச் செல்வதாக ஆசை காட்டியுள்ளார் அந்த இளைஞர். அவரை நம்பிய பெண்களிடம் இருந்து பணத்தையும், நகைகளையும் சுருட்டிக்கொண்டு தலைமறைவாகி விடுவது இவரது வாடிக்கை என்கின்றனர் பொலீஸார்.

தனது மோசடிகளுக்கு வசதியாக ஐரோப்பிய நாடொன்றில் தான் குடியுரிமை பெற்றுள்ளார் என்று பாசாங்கு செய்தும் வந்துள்ளார். வாட்டசாட்டமான உடல்வாகை வைத்துக் கொண்டு இளம் பெண்களை மயக்குவதில் அவர் சாகசக்காரராக விளங்கியுள்ளார். நவநாகரிக உடைகளை அணிந்து கொண்டு தன்னைப் பிறர் நம்பக் கூடிய விதத்தில் அவர் நடந்துள்ளார் என்கின்றனர் பொலீஸார்.

குறித்த பெண்களிடம் இருந்து இளைஞர் 50 லட்சம் ரூபா பெறுமதியான பணத்தையும், நகைகளையும் மோசடி செய்துள்ளார் என்று பொலீஸ் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

### உத்தியோகபூர்வ முடிவுகள்

| | |
|---|---|
| சீட்டிழுப்பு வாரம் | 707 |
| திகதி | 23-8-2005 |

டிக்கட்டின் நிறம் - நீலம்

செல்லுபடியாகும் தொடர் இல.
**4690230-4706434**

வெற்றி இலக்கங்கள்
**07 32 33 43**

லக்கினம் கன்னி

ஜக்பொட் பரிசு
ரூபா. 15,73,400/-
வெல்லப்படவில்லை
இந்த வெள்ளிக்கிழமை
ரூபா. 23,71,300/-

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரூ.) | மொத்தப் பரிசுத் தொகை(ரூ.) |
|---|---|---|---|
| 1.இல | 3,57,219 | 10/- | 35,72,190/- |
| 2.இலக்கங்கள் | 32,782 | 20/- | 6,55,640/- |
| 1.இல லக்கினம் | 32,564 | 30/- | 9,76,920/- |
| 2.இல லக்கினம் | 2,975 | 100/- | 2,97,500/- |
| 3.இலக்கங்கள் | 875 | 500/- | 4,37,500/- |
| 3.இல லக்கினம் | 78 | 5,000/- | 3,90,000/- |
| 4.இலக்கங்கள் | 04 | 1,00,000/- | 4,00,000/- |
| 4.இலக்கங்கள் | - | 15,73,400/- | - |
| | | மொத்தம் | 67,29,750/- |
| மோட்டார் முச்சக்கர வண்டி | 5 | 2,10,450/- | 10,52,250/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | | | 77,82,000/- |

மொத்த பரிசுத் தொகை ரூபா. 77,82,000/- தொடர் இல. 5643550 க்கு மேற்பட்ட சிவப்பு நிற டிக்கட்டுக்கள் 2005 ஆகஸ்ட் 26 ஆம் திகதி வெள்ளிக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33 சேன்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி,
கொழும்பு 03.

அபிவிருத்தி அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 5 டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| நுவரெலியா | 4696423-9-01 |
| அநுராதபுரம் | 4699982-4-93 |
| கேகாலை | 4695100-5-68 |
| ஹம்பாந்தோட்டை | 4693765-7-07 |
| கொழும்பு | 4706197-6-57 |

## 10 ஆவது பிறந்தநாள் வாழ்த்து




கைதடி திரு. திருமதி துரைசிங்கம் வனிதா தம்பதிகளின் செல்வப் புதல்வன் செந்தாளன் தனது 10 ஆவது பிறந்த நாளை பிரான்ஸிலுள்ள தமது இல்லத்தில் அன்புச்சகோதரிகள் இலக்கியா, கீர்த்தனா பெற்றோர்கள் மற்றும் நண்பர்கள், உறவினர்களுடன் இன்று (25.08.2005) வியாழக்கிழமை கொண்டாடுகின்றார்.

'இவர்
அனைத்திலும் ஆற்றல்
பெற்று
அகிலம் போற்றும்
உத்தமனாய் வளர
வாழ்த்துகின்றோம்'

*வாழ்த்துவோர்:*
*அன்புப் பெற்றோர், சகோதரிகள், சகோதரர்கள், அம்மம்மா, அப்பம்மா, மாமாமார்கள், அத்தைமார்கள், சித்திமார்கள், சித்தப்பாமார்கள் , அத்தான்மார்கள், மச்சிமார்கள், நண்பர்கள், தாயகத்திலுள்ளோர், பிரான்ஸ், சுவிஸ், டென்மார்க், ஹொலண்ட், ஜேர்மன், பெல்ஜியம், லண்டன், அமெரிக்கா, கனடா, நோர்வே, இந்தியா போன்ற இடங்களில் வசிக்கும் நெருங்கிய உறவினர்கள்.*

'அன்னகம்'
கைதடி மேற்கு,நேவையூர், கைதடி.

(39250)(51-)

**ஸ்ரீதரன் மாமா.**

## ஆங்கில ஆசிரியப் பணிநிலைக்கான வேண்டுகை

பகுதிநேரமாகவோ, முழு நேரமாகவோ ஆங்கிலம் கற்பிக்கக்கூடிய இருபாலாரிடமிருந்தும் வேண்டுகைகள் கோரப்படுகின்றன.

01. தகைமைகள்:
    *அ) பயிற்றப்பட்ட ஆங்கில ஆசிரியர்*
    *ஆ) பட்டதாரிகள்*
02. பட்டறிவு: ஆங்கில ஆசிரியராக ஐந்து ஆண்டுகளுக்கு மேல் பணியாற்றியிருத்தல் வேண்டும்.
03. அகவை: 30 தொடக்கம் 60 வரை.
04. வேண்டுகை முடிவு நாள்: 31-08-2005
05. வேண்டுகை அனுப்பவேண்டிய முகவரி:

**பொறுப்பாளர்,**
***மனிதவள மேம்பாட்டுப் பகுதி,***
***நிதித்துறை,***
***நாகதம்பிரான் வீதி,***
***கிளிநொச்சி.***

06.நேர்காணல் நடைபெறும் நாள்: 03-09-2005
07. நேர்காணல் நடைபெறும் இடம்:

***மனிதவள மேம்பாட்டுப் பகுதி,***
***நிதித்துறை,***
***நாகதம்பிரான் வீதி,***
***கிளிநொச்சி.***

08. நேர்காணலுக்கு வருகைதருவோர் தங்கள் கல்வித் தகைமைச் சான்றிதழ்கள், பிறப்புச் சான்றிதழ், வதிவிடச் சான்றிதழ், அடையாள அட்டை ஆகியவற்றின் படிகளுடன் வருகை தரவேண்டும்.
09. சம்பளம்: ஆசிரியராகத் தெரிவுசெய்யப்படுவோரின் தகைமைக்கும் பட்டறிவுக்கும் ஏற்ப பத்தாயிரம் ரூபாவிற்குக் குறையாத சம்பளம் வழங்கப்படும்.

ஆளுகை,
மனிதவள மேம்பாட்டுப் பகுதி, நிதித்துறை.

(சி-44767)(26-14-13)

# உலக அணி - ஆஸி. மோதும் சூப்பர் கிரிக்கெட்

சர்வதேசகிரிக்கெட்சபை (ஐசிசி.,) தரவரிசையில் முதலிடத்தில் உள்ள அணிக்கும், உலக அணிக்கும் இடையே மூன்று ஒரு நாள் போட்டி, ஒரு டெஸ்ட் போட்டி கொண்ட சூப்பர் தொடர் நடத்த முடிவு செய்துள்ளது. இந்தப் போட்டிக்கு சர்வதேச கிரிக்கெட் சபை சர்வதேச அங்கீகாரம் அளித்துள்ளது., தரவரிசையில் முதலிடதத்தில் இருக்கும் ஆஸ்திரேலியாவை எதிர்த்து உலக அணி விளையாடும்.

உலக அணியைத் தெரிவு செய்வதற்காக இந்தியாவின் சுனில் கவாஸ்கர் தலைமையில் தெரிவுக் குழு அமைக்கப்பட்டது. மைக் ஆர்தர்டன் (இங்கிலாந்து), கிளைவ் லொயிட் (வெஸ்ட் இண்டீஸ்), ரிச்சர்ட் ஹாட்லி (நியூசிலாந்து), ஜொண்டி ரோட்ஸ் (தென் ஆபிரிக்கா), அரவிந்த டி சில்வா (இலங்கை) ஆகியோர் அடங்கிய இக் குழு, உலக அணி வீரர்களை டுபாயில் நேற்று முன்தினம் அறிவித்தது.

பதிமூன்று பேர் அடங்கிய உலக டெஸ்ட் அணியின் தலைவராக கிரேம் ஸ்மித் (தென் ஆபிரிக்கா), துணைத் தலைவராக ராகுல் டிராவிட் (இந்தியா) இருப்பார்கள். 14 பேர் அடங் கிய ஒரு நாள் போட்டி அணித் தலைவராக ஷேன் பொலக் (தென்னாபிரிக்கா), துணைத் தலைவராக சச்சின் டெண்டுல்கர் (இந்தியா) அறிவிக்கப்பட்டுள்ளனர்.

மூன்று ஒரு நாள் போட்டிகள் ஒக்ரோபர் 5, 7 மற்றும் 9ஆம் திகதிகளில் மெல்போர்ன் நகரிலும், டெஸ்ட் போட்டி அக்ரோபர் 14 - 19ஆம் திகதிகளில் சிட்னியிலும் நடக்கும்.

உலக அணி ஒரு நாள் போட்டி: ஷேன் பொலக் (தலைவர்), சச்சின் டெண்டுல்கர் (துணைத் தலைவர்), வீரேந்தர் சேவக், ஜாக்ஸ் காலீஸ், பிறைன் லாரா, கெவின் பீட்டர்சன், கிப்ஸ், ஆன்ட்ரூ பிளின்டாப், குமார் சங்கக்காரா, ஷாகித் அப்ரிடி, சொயிப அக்தர் மகாயா நிடினி, முத்தையா முரளிதரன் மற்றும் டேனியல் வெட்டோரி.

டெஸ்ட் போட்டி: கிரேம் ஸ்மித் (தலைவர்), ராகுல் டிராவிட் (துணைத் தலைவர்), வீரேந்தர் சேவக், சச்சின் டெண்டுல்கர், பிறைன் லாரா, ஜாக்ஸ் காலீஸ், ஆன்ட்ரூ பிளின்டாப், ஷேன் பொலக், மார்க் பவுச்சர், ஸ்டீவ் ஹார்மீசன், சொயிப் அக்தர், முத்தையா முரளிதரன், வெட்டோரி. (ஒ)




## தீவக மட்டத்திலான கரபந்தாட்டம்; உதயசூரியன், காந்திஜி அணிகள் வெற்றி

யாழ்ப்பாணம்,ஓக.25

ஊர்காவற்றுறை தம்பாட்டி காந்திஜி சனசமூக நிலையமும் காந்திஜி விளையாட்டுக் கழகமும் இணைந்து 40ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டும் கிராமத்தில் மறைந்த மாவீரர்கள் நினைவாகவும் நடத்தி வரும் தீவக ரீதியிலான 'செற்அப்' கரபந்தாட்டப் போட்டியில் கடந்த வாரம் மின்னொளியில் நடைபெற்ற அரையிறுதியாட்டத்தில் உதயசூரியன் வி.க., காந்திஜி வி.க. (பி) ஆகியன வெற்றி பெற்றன.

காந்திஜி (ஏ) வி.கவை எதிர்த்து உதய சூரியன் வி.க.மோதியது. இதில் உதயசூரி யன் வி.க. அணி எதிர்த்து விளையாடிய காந்திஜி அணியை 25:18, 25:22, 25:17 என்ற செற்கணக்கில் வெற்றி கொண்டது.

இதனைத் தொடர்ந்து இடம் பெற்ற மற்றோர் அரையிறுதியாட்டத்தில் எழுவைதீவு பற்றிமா வி.க.வை எதிர்த்து காந்திஜீ வி.க. (பி) அணி மோதியது. இதில் காந்திஜீ வி.க.(பி) அணி எதிர்த்தாடிய எழுவைதீவு பற்றிமா அணியை 25:16, 25:12 என்ற செற்கணக்கில் வெற்றிகொண்டது. (த-190)

## கிரிக்கெட் போட்டி

யாழ்ப்பாணம்,ஓக.25

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் நடத்தும் 20 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் இன்றும் நாளையும் நடைபெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு.

இன்று பிற்பகல் 3.30 மனோகரா வி.க. எதிர் மைக்கல் வி.க. (ஏ)

நாளை பிற்பகல் 3.30 ஞானம்ஸ் வி.க. எதிர் கொலின்ஸ் வி.க.(த-190)

## ஆவரங்கால் மத்தி, விளையாட்டு அலகு அணிகள் கரபந்தாட்டத்தில் சம்பியன்கள்

யாழ்ப்பாணம்,ஓக.25

யாழ். மாவட்ட கரபந்தாட்டச் சங்கம் நடத்திய கரபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் ஆவரங்கால் மத்தி வி.க., யாழ். பல்கலைக் கழக விளையாட்டு அலகு வி.க. ஆகியன சம்பியன்களாகின.

இச்சுற்றுப்போட்டியின் இறுதியாட்டங்கள் கழக மைதானத்தில் கழகத் தலைவர் கப்டன் டி.ஏ.எம். குணசிங்க தலைமையில் நடைபெற்றன.

முதலில் இடம்பெற்ற ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் ஆவரங்கால் மத்தி வி.க. அணியை எதிர்த்து அச்சுவேலி விக்னேஸ்வர வி.க. அணி மோதியது.

இப்போட்டி 5 சுற்றுக்களாக இடம்பெற்றது. முதல் இச்சுற்றில் ஆவரங்கால் மத்தி வி.க. 26:24, 25:21 புள்ளிகளையும் மற்றைய இரு செற்களில் அச்சுவேலி விக்னேஸ்வர வி.க. 25:19, 27:25 என்ற புள்ளிகளையும் பெற்றன.

இறுதிச்சுற்றில் 15:12 என்ற புள்ளி அடிப்படையில் ஆவரங்கால் மத்தி வி.க. அணி வெற்றிபெற்றது.

தொடர்ந்து இடம்பெற்ற பெண்களுக்கான ஆட்டத்தில் நேரம் போதாமையினால் 20 புள்ளிக்கு மட்டுப்படுத்தப்பட்ட போட்டியாக இடம்பெற்றது. இதில் யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான விளையாட்டு அலகு அணியை எதிர்த்து பருத்தித்துறை ஐ.வி.க. அணி மோதியது.

யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான விளையாட்டு அலகு அணி எதிர்த்து விளையாடிய பருத்தித்துறை ஐ.வி.க. அணியை 20:19 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றிகொண்டது.

நடுவர்களாக கே.மனோகரன், கே.ஏகாம் பரம், எஸ்.அப்புத்துரை, எ.சுரேஸ் ஆகியோர் கடமையாற்றினர்.

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கமும் இலங்கை வங்கியின் வடபிராந்திய முகாமையாளர் எஸ்.பாலசுப்பிரமணியமும் விருந்தினர்களாகப் பங்குபற்றினர். (3-190)



ஊர்காவற்றுறை, நாரந்தனை தெற்கு அண்ணா சனசமூக நிலைய முன்பள்ளிகளின் விளை யாட்டு விழா அண்மையில் இடம்பெற்றது. இந்த நிகழ்வின் ஆரம்பத்தில் இறைவணக்கம் இடம் பெற்றபோது எடுக்கப்பட்ட படம் இது.

## ஸ்ரான்லியை 4 விக்கெட்டுக்களால் வென்றது ஜொலிஸ்ரார் அணி

யாழ்ப்பாணம்,ஓக.25

சுன்னாகம் ஸ்கந்தா ஸ்ரார் விளையாட்டுக்கழகம் 'உதயன்' ஊடக அனுசரணையுடன் துஷ்யந்தன் நினைவு வெற்றிக்கிண்ணத்துக்காக நடத்திவரும் கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் ஸ்ரான்லி அணியை 4 விக்கெட்டுக்களால் ஜொலிஸ்ரார் அணி வென்றது.

யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடந்த ஆட்டம் ஒன்றில் முதலில் துடுப்பெடுத்தாடிய ஸ்ரான்லி அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 110 ஓட்டங்களைப் பெற்றது.

தணூஸ், கஜதீபன் ஆகியோர் முறையே 37, 14 ஓட்டங்களைப் பெற்றனர். ஆதவன், ஜீரத்தனன், கே.ஜதுகுலன் ஆகியோர் முறையே 4, 2, 1 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்குக்களமிறங்கிய ஜொலிஸ்ரார் அணி விக்கெட்டுக்களை மளமளவென்று இழந்தபோதும் ஆரம்பத் துடுப்பாட்ட வீரரின் ஆட்டத்தால் 4 விக்கெட்டுக்களால் வென்றது.

கே.ஜதுகுலன் 43 ஓட்டங்களையும் ஜீரத் தனன் ஆட்டமிழக்காமல் 23 ஓட்டங்களையும் பெற்று அணியின் வெற்றிக்கு வழிவகுத்தனர்.

கணேஸ்குமார் 3 விக்கெட்டுக்களையும் சாந்தகுமார் 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

இந்த ஆட்டத்தில் சிறந்த வீரராக ஜொலி ஸ்ரார் வீரர் கே.ஜதுகுலன் தெரிவுசெய்யப்பட்டார். (3)

## உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம்,ஓக.25

ஊர்காவற்றுறை காந்திஜி சனசமூக நிலையமும் காந்திஜி விளையாட்டுக் கழகமும் இணைந்து தம்பாட்டி கிராம மாவீரர்களின் ஞாபகார்த்தமாக தீவக ரீதியிலான 9 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டப்போட்டி ஒன்றை நடத்தவுள்ளன.

போட்டிகள் நாளை வெள்ளிக்கிழமை ஆரம்பமாகின்றன. இதில் ஊர்காவற்றுறை, வேலணை, நெடுந்தீவு உதவி அரச அதிபர் பிரிவு உள்ளடங்கிய கழகங்கள் பங்குகொள்கின்றன. (த-190)

# அரசின் பொறுப்பு

**'உதயன்', 'சுடர்ஒளி' பத்திரிகைகளின் வெள்ளவத்தைக் கிளைக் காரியாலயம் மீது கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற தாக்குதலைக் கண்டித்து 'லங்கா தீப' பத்திரிகை கடந்த 22ஆம் திகதியன்று ஆசிரியர் தலையங்கம் எழுதியது. அதன் தமிழ் மொழியாக்கம் இங்கு தரப்படுகின்றது.**

'சுடர் ஒளி' பத்திரிகையின் கொழும்பு, வெள்ளவத்தையில் அமைந்துள்ள விளம்பரப் பணிமனைக்கு கைக்குண்டு வீசப்பட்ட சம்பவத்தை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். பத்திரிகைச் சுதந்திரத்தின் மீது தொடுக்கப்பட்ட தாக்குதல் என்பதாலும், அடிப்படை உரிமைக்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தல் என்பதாலும் நாம் இதனைக் கண்டிக்கிறோம்.

அது ஒரு தமிழ்ப் பத்திரிகை. எந்த மொழியில் வெளியிடப்பட்டாலும் பத்திரிகை அலுவலகம் மீதோ, பத்திரிகையின் விளம்பரப் பணிமனை, விநியோக அலுவலகம் போன்ற பத்திரிகையுடன் தொடர்புபட்ட பிரிவுகள் மீதோ, அவ்வாறான அமைப்புகள் மீதோ பத்திரிகையாளர்கள் அல்லது பத்திரிகை நிறுவன ஊழியர்கள் மீதோ யாராவது தாக்குதல் நடத்துவார்களேயானால், தடுப்பார்களானால் நாம் அதனை ஏற்கமுடியாது.

அச்சு ஊடகங்கள் மீதோ, அச்சு ஊடக நிறுவனங்கள் மீதோ மட்டுமன்றி இலத்திரனியல் ஊடகங்கள் மீதோ, இலத்திரனியல் ஊடக நிறுவனங்கள் மீதோ யாரும் தாக்குதல் நடத்துவார்களேயானால் அல்லது தடங்கல் விதிப்பார்களேயானால் அதையும் ஏற்கமுடியாது. ஊடகச்சுதந்திரத் துக்கு இவை பெரும் தடையென நாம் கருதுகிறோம். இதில் இரண்டு பேச்சுக்கு இடமில்லை. விளம்பரம் ஒன்றைக் கையளிக்க வந்த இனந்தெரியாத நபர் ஒருவரால் இந்தக் கைக்குண்டு வீசப்பட்டிருக்கலாம் என வெள்ளவத்தைப் பொலீஸாரின் கூற்றிலிருந்து தெரிகின்றது. சந்தேகநபர் அலுவலகத்தினுள் கைக்குண்டைப் போட்டுவிட்டு தப்பிச்சென்றுள்ளார். இரண்டு கைக்குண்டுகள் வீசப்பட்டதாகவும் அதிர்ஷ்டவசமாக அதில் ஒன்று வெடிக்கவில்லை என்று செய்திகள் வெளிவந்தன. கைக்குண்டு வீசப்பட்டபோது அங்கு கடமையாற்றிய ஊழியர்கள் இரண்டு பேர் பின் கதவினூடாகத் தப்பிச்சென்றுள்ளனர் எனவும் செய்திகள் வெளிவந்துள்ளன.

குண்டை வீசியவர் இதனை விளையாட்டாக மேற்கொண்டார் என்று கருதிவிட முடியாது. அவர் ஏதோவொரு நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக வந்தவர் என்பதை சுலபமாகக் கருதிவிட முடியும். அவரின் நோக்கம் அழிவொன்றை ஏற்படுத்துவதாகும். அல்லது கொலை ஒன்றை நடத்துவதாகவும் இருந்திருக்கலாம். அப்படியில்லாத பட்சத்தில் விளம்பர அலுவலகத்தைச் சேதப்படுத்துவது அன்றில் பத்திரிகை உரிமையாளர்களைப் பயமுறுத்துவதற்காகவும் இருக்கலாம். அல்லது பத்திரிகையின் விளம்பரப் பணியாளர்களைப் பயப்படுத்தவும் இதைச் செய்திருக்கலாம்.

எதுவாக இருந்தாலும் ஒன்று தெளிவாகிறது. அதாவது, குண்டுதாரிகள் மிலேச்சத்தனமான ஒரு நோக்கத்தைக் கொண்டிருந்தார்கள். இதனால் அது கொடூரமானதும் பயங்கரமானதுமாகும். இது யாராவது ஒருவரின் தீவிரவாதச் செயற்பாடாகும். இதன் பின்னணியில் யார் இருக்கிறார்கள். எந்த இயக்கம் இருக்கின்றது. என்பதை நாம் அறியோம். யார் பின்னணியில் இருந்தா லும் இது ஜனநாயகச் செயற்பாடு அல்ல. ஜனநாயகத்துக்கு ஊறு விளைவிக்கும் ஒரு குழுவின் அல்லது ஒருவரின் செயற்பாடாக இது இருக்கலாம் எனக் கூறிவிடலாம். ஜனநாயகத்துக்கு ஏற்ப செயற்படும் ஒரு குழு அல்லது ஒரு நபர் இதனைச் செய்திருக்க முடியாது.

ஊடகச் சுதந்திரத்திற்கு ஊறுவிளைவிப்பவர்கள், அடுத்தவரின் கருத்துக்களுக்கு ஊறுவிளைவிப்பவர்கள் ஆவர். அடுத்தவரின் அடிப்படை உரிமைகளுக்கு ஊறு விளைவிப்பவர்களாவர். இவர்கள் ஏனையோரின் மனச்சாட்சிக்கும் சுதந்திரத்துக்கும் பங்கம் விளைவிப்பவர்கள். அத்துடன், நம்பிக்கை வைப்பதற்கும், சுதந்திரமாகச் சிந்திப்பதற்கும், சுதந்திரமாகக் கருத் துக்களை வெளியிடுவதற்கும் ஏனையோ ருக்குள்ள உரிமையை இவ்வாறான சமூக விரோதக் குழுக்கள், நபர்கள் விரும்பமாட்டார்கள் என்பதை இங்கு கூறவேண்டியதில்லை.

குற்றத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்களைக் கண்டறிய வேண்டும். அவர்களைக் கண்டுபிடித்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டியது பொலீஸாரின் பொறுப்பு. அண்மையில் ஒரு அரசியல்வாதி ஒருவர் ஊடகங்களுக்கு எதிராக மோசமான முறையில் கதைத்தார் என்பது இரகசியமான ஒரு விடயமல்ல. அவரின் பேச்சைத் தொலைக்காட்சிகள் ஒளிபரப்பியதைப் பார்த்து பலர் வியந்ததும் தெரிந்ததே. அந்த அரசியல்வாதி சில வருடங்களுக்கு முன்னர் பத்திரிகை ஊடகம் ஒன்றுக்குச்சென்று ஆசிரிய பீட உறுப்பினர்களை அவமதித்துப் பேசியதும் தெரிந்த விடயம். உண்மையில் இவை யெல்லாம் ஜனநாயக விரோதச் செயற்பாடுகளாகும்.

இலங்கை போன்ற ஜனநாயக நாட்டில் இவ்வாறானவற்றுக்கு இடமளிக்கக்கூடாது. இதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டியது ஆட்சிகளில் இருக்கும் அரசாங்கங்களின் பொறுப்பாகும்.

இவற்றைத் தொடர்ந்தும் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. மக்களின் அடிப்படை உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும். அப்படியில்லாத பட்சத்தில் தொடர்ந்தும் மகிழ்ச்சியான வாழ்வைக் கொண்டுசெல்லமுடியாது. அனைத்துப் பிரஜைகளுக்கும் கருத்துச் சுதந்திரம், அமைதியாக ஒன்றுகூடும் சுதந்திரம், தொழிற்சங்கத்தை அமைக்கும் சுதந்திரம், மொழிப் பயன்பாட்டுச் சுதந்திரம், நிம்மதியாக வாழும் சுதந்திரம் இருக்கவேண்டும். அரசமைப்பில் தெளிவாகக் குறிப்பிடப்படுகின்றது. அந்த உரிமை உண்மையில் இருக்க வேண்டும். பெயரளவில் மட்டும் வரையறுக்கப்படக் கூடாது. இதனைக் கவனத்தில் எடுத்துக் கொள்ளாவிட்டால் இனிமேலும் அனர்த்தங்களுக்கு இடமுண்டு. (க-3)

## சுன்னாகம், உடுவில் பிரிவுகளில் நாய்களுக்குத் தடுப்பூசி

யாழ்ப்பாணம்,ஓக.25

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் சுன்னாகம், உடுவில் உப அலுவலகங்களுக்கு உட்பட்ட பிரதேசங்களில் உள்ள வளர்ப்பு நாய்களுக்கு விசர்நாய் தடுப்பு ஊசி ஏற்றவும் உரிமத்தகடு வழங்குவதற்கும் கட்டாக்காலி நாய்களைப் பிடித்து அழிப்பதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என சுன்னாகம் வலி.தெற்குப் பிரதேசசபை செயலர் செ. தவராசா அறிவித்துள்ளார்.

தடுப்பு ஊசி ஏற்றப்படவுள்ள திகதி நேரம் இடம்பற்றிய விவரங்கள் வருமாறு:-

இன்று வியாழக்கிழமை காலை 9 மணி, தாவடி பத்திரகாளி கோவிலடி, சுன்னாகம் பொது நூலகம், முற்பகல் 11.30 மணிக்கு புளிதிட்டி சனசமூகநிலையம், சுன்னாகம் சிவன்கோயிலடி சிவன் முன்பள்ளி, 1.30 மணி சுன்னாகம் வடக்கு சனசமூக நிலையம்.

நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு இணுவில் மேற்கு கிராம சேவையாளர் அலுவலகம், முற்பகல் 11 மணிக்கு இணுவில் கிழக்கு கலாஜோதி சனசமூக நிலையம், மதியம் 12.45 மணிக்கு அம்மன் கோயிலடி சிவகாமி மாதர் சங்கம், பிற்பகல் 2 மணிக்கு சபாபதிப்பிள்ளை வீதி காந்தரூபன் சனசமூக நிலையம்,

கட்டாக்காலி நாய்கள் நாளை வெள்ளிக்கிழமை சுன்னாகம் நகர்ப்பகுதியில், பிடிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (த-204)

## உயர்தர மாணவருக்கு பயிற்சி வகுப்பு

யாழ்ப்பாணம்,ஓக.25

யாழ்.றோட்டறிக்கழகமும் நிவார்க் றோட்டறிக் கழகமும் இணைந்து ஜி.சீ.ஈ. உயர்தரம் 2007ஆம் ஆண்டு மாணவர்களுக்கான இலவச ஜி.ஐ.ரி வகுப்புக்களை நடத்தவுள்ளது.

இருபாலாருக்குமான பயிற்சிகள் நாளை மறுதினம் முற்பகல் 10மணிக்கு வல்லிபுர ஆழ்வார் ஆலய யுனிவேர்சல் ரெக்னோலஜி சென்ரரிலும்-

பெண்களுக்கான பயிற்சி நிலையம் நாளை மறுதினம் நண்பகல் 12 மணிக்கு வடஇந்து மகளிர் கல்லூரியிலும் ஆரம்பமாகவுள்ளன.

வகுப்பில் இணைய விரும்பும் மாணவர்கள் வடமராட்சி கல்வி வலயத் திட்டமிடல் உதவிக் கல்விப் பணிப்பாளருடன் நாளை 26.08.2005 இற்கு முன்பாக தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (3-202)

## அறநெறி மாணவருக்கான இந்து சமயப் பரீட்சை நவம்பரில்

வலிகாமம் தெற்கு,ஓக.25

அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கான இந்து சமய இறுதிப் பரீட்சை நவம்பர் மாதத்தில் நடைபெறும் எனப் பரீட்சை ஆணையாளர் நாயகம் டபிள்யூ ஏ.எம். விஜயஸ்ரீ தெரிவித்துள்ளார்.

இப் பரீட்சைக்கு மாணவர்கள் பதிவு செய்யப்பட்ட அறநெறிப்பாடசாலை ஒன்றின் மூலமே தோற்றமுடியும்.

அறநெறிப் பாடசாலைகளில் மேற்பிரிவில் பத்தாம் தரத்தில் சித்தியெய்திப் பதினொராம் தரத்தில் கல்வி பயில்பவர்களும், ஏற்கனவே இப் பரீட்சைக்குத் தோற்றிச் சித்தி பெறத் தவறியவர்களும் இப்பரீட்சைக்குத் தோற்ற முடியும் எனவும் பரீட்சை ஆணையாளர் அறிவித்துள்ளார். (8-152)

## நடமாடும் வைத்திய சேவை முகாம்கள்

வலிகாமம் தெற்கு,ஓக.25

மானிப்பாய் கிறீன் ஞாபகார்த்த வைத்தியசாலை, இணுவில் மக்லியட் வைத்தியசாலை என்பன இணைந்து கிராமந்தோறும் நடமாடும் வைத்தியசேவை முகாம்களை வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம் போன்ற பிரதேசங்களில் நடத்திவருகின்றன.

நடமாடும் வைத்திய சேவையை நடத்துவதற்கு வசதியாகவும் வைத்தியசாலைகளின் அவசர தேவைகளுக்குப் பயன்படுத்தவும் என வாகனம் ஒன்றினை டாக்டர். பிறேமன் ஜெயரட்ணம் பெற்றுக்கொடுத்துள்ளார்.

குடத்தனை, சாவகச்சேரி, சுழிபுரம், வரணி, சாவற்கட்டு போன்ற இடங்களில் வைத்திய சேவை முகாம்கள் நடைபெற்று வருகின்றன.

மேற்படி வைத்தியசாலைகளில் கடமையாற்றும் பல்வேறு நோய்களுக்கான வைத்தியர்கள் இச்சேவை முகாம்களில் பணியாற்றி வருகின்றனர். (8-152)

MANOJ AIR TOURS (PVT) LTD.

**பயணிகள் கவனத்திற்கு**

செவ்வரத்தை, குறோட்டன், பாம்ஸ், மினி எக்ஸ்சோறா, அரக்கேரியா, சைபிரஸ் றெசீனா, யெற்றோவா ஆகிய கன்றுகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: S.பாக்கியநாதன், 152/2, கோயில் வீதி, யாழ்ப்பாணம். (39216)

புதிய DVD HOME THEATOR SYSTEM (DVD PLAYAR, WOOFER, 5 SPEAKERS) விற்பனைக்குண்டு தொடர்பு: கிஷோ, 32/16, PRESS ROAD, JAFFNA. T.P.: 0777 575701. (39252)

### அராலியூர் சுந்தரம் பிள்ளையின் நூல்கள்

1. "சிறுகதை எழுதுவது எப்படி?" எல்லா மாணவர்களிற்கும் வேண்டிய நூல். 2. "இமயம்" இந்த நாட்டில் நடந்த சம்பவங்களைச் சித்திரிக்கும் பதினொரு நவீன நாடகங்கள். 3. "வானொலி நாடகம் எழுதுவது எப்படி?" ரூ.150. (39249)

### காணி விற்பனைக்கு

கொக்குவில், பிரம்படி ஒழுங்கையில் நிலப்பரப்பு 4 குழி 14.16 விஸ்தீரணம் கொண்ட காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: 39, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் T.P.:222 2390. (39246)

### தவறிவிட்டது

ச.இரத்தினசிங்கம் என்பவருடைய மூக்குக் கண்ணாடி 22-08-2005ஆம் திகதி சாவகச்சேரிக்கும் மந்துவிலுக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் சாவகச்சேரி கால்நடை வைத்திய அலுவலகத்தில் ஒப்படைத்து தவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (சி-44756)

### வான் விற்பனைக்குண்டு

'கை ஏஸ்' ரொயட்டா - செல் மொடல் 50XXXX தொடரிலக்கமுடைய வெள்ளை நிற வான் விற்பனைக்குண்டு. காலை 10.00 - 6.00 மணி வரை பார்வையிடலாம். 316, நாவலர் வீதி (உப தபால் நிலைய அருகில்), ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (39234)

### ஆடு விற்பனைக்கு

பெரிய இன கடா ஆடு விற்பனைக்குண்டு. நீங்கள் தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி: S. முருகேசு, A.V. றோட், கொழும்புத்துறை. (39246)

### அபூர்வஜோதிடம்

கஷ்டஸாத்தியமான நாக்கு, தொண்டை, மார்புப்புற்றுநோய் பூரணமாகக் குணமாதல் சனி, ஞாயிறு அதிர்ஷ்ட பலன் அறிதல் 8.30 - 2.00 p.m. தொடர்பு: விதானையார்வளவு, உயரப்புல பிள்ளையார் கோயிலடி, ஆனைக்கோட்டை. (39215)

### வீடு வாடகைக்குத் தேவை

சிறிய குடும்பம் வசிப்பதற்கு வீடு வாடகைக்குத் தேவை. (கந்தர்மடம்) நாவலர் வீதி, பிறவுண் வீதி ஆகிய இடங்கள் விரும்பத்தக்கவை. தொடர்பு: 0777-448666, 077- 6500040. (39240)

## முதியோர் இல்லங்களுக்கு பரிசில் வழங்க ஏற்பாடு

கொக்குவில்,ஓக.25

சர்வதேச முதியோர் தினத்தை முன்னிட்டு மாகாண மட்டத்தில் முதியோர் இல்லங்கள் மற்றும் குழுக்கள் தெரிவுசெய்யப்பட்டு பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

இதுதொடர்பாக சுற்றறிக்கை ஒன்றை வடக்கு - கிழக்கு மாகாணச் சமூக சேவைகள், சிறுவர் நன்னடத்தைப் பராமரிப்புச் சேவைத் திணைக்களப் பணிப்பாளர் என். ஆர்.ரஞ்சினி, வடக்கு -கிழக்கிலுள்ள சகல அரச அதிபர்களுக்கும் அனுப்பிவைத்துள்ளார்.

அச்சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

இவ்வாண்டு ஒக்ரோபர் முதலாம் திகதி நடைபெறவுள்ள சர்வதேச வயதுவந்தவர்கள் ஞாபகார்த்த தினத்தைச் சிறப்பாக நடத்துவதற்கு முதியோர் தேசிய செயலகத்தினால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

எமது சமூகத்தில் அநாதரவாக விடப்பட்ட வயது வந்தோர்களைப் பராமரிக்கும் நிலையங்களான முதியோர் இல்லங்கள், முதியோர் பகல் பராமரிப்பு நிலையங்கள், முதியோர்களுக்காகச் செயற்படும் குழுக்கள் என்பன மதிப்பீடு செய்யப்படவுள்ளன.

இதற்காக மாகாண மட்டத்தில் சிறந்த வயதுவந்தோர் இல்லம், முதியோர் பகல் பராமரிப்பு நிலையம், முதியோர் குழு என்பவற்றைத் தெரிவுசெய்து பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கென யாழ். மாவட்டத்தில் பிராந்திய ஆணையாளர் திருமதி எஸ்.சிவலிங்கம், பருத்தித்துறை சமூகசேவை அலுவலர் எஸ். இராசலிங்கம், மாவட்ட கிராம அபி விருத்தி உத்தியோகத்தர் ரி.தியாகமூர்த்தி ஆகியோர் கொண்ட குழுவொன்று தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

இக்குழுவினர் இடும் புள்ளிகளின் அடிப்படையிலேயே யாழ். மாவட்டத்திலுள்ள பதிவுசெய்யப்பட்ட முதியோர் இல்லங்கள், முதியோர் பகல்பராமரிப்பு நிலையங்கள் மற்றும் முதியோர் குழுக்கள் என்பன தெரிவுசெய்யப்படவுள்ளன. (த-76)

## நாய்களுக்குத் தடுப்பூசி

யாழ்ப்பாணம்,ஓக.25

கொக்குவில் பொதுச்சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர்நோய்த் தடுப்பு ஊசிகள் போடப்பட வுள்ளன. தடுப்பு ஊசி கள் போடப்படவுள்ள திகதி, நேரம், இடம் பற்றிய விவரம் வருமாறு:-

* இன்று வியாழக்கிழமை காலை 9 மணி - தாவடி தெற்கு, காளி கோயிலடி சன சமூக நிலையம் முற்பகல் 10.30 மணி- புதுவீதி, பாரதி சனசமூக நிலையம் மதியம் 12.45 - கொக்குவில் மேற்கு அம்பாள் சன சமூக நிலையம்.
* நாளை காலை 9 மணி - கொக்குவில் மேற்கு, காந்திஜி சன சமூக நிலையம், முற்பகல் 10.30 மணி - பூநாறி வீதி, கலைவாணி சனசமூக நிலையம் மதியம் 12.45 மணி - கொக்குவில் கிழக்கு, கொக்குவில் ச.ச. நிலையம். (த-204)

## ACTION CONTRE LA FAIM — Vacancy for Radio Operator/ Fleet Manager

The advertisement tittled above appearing on 21.08.2005 in Uthayan, three words in the opening paragraph should be read as follows:-

Action Contre La Faim is an International NGO involved in Humanitarian activities in SriLanka since 1997. Current activities are based in Ampara, Batticaloa and Trincomalee districts. We require services of a Radio Operator / Fleet Manager for Jaffna.

- Editor.

## தொழில்திணைக்களத்துக்கு வாகன வசதி இல்லை

யாழ்ப்பாணம், ஓக.25

யாழ்.தொழில் திணைக்களத்திற்கு வாகன வசதிகள் இன்மையால் தொழில் நடவடிக்கைகள் முடக்கப்படுவதாக யாழ்.தொழில் திணைக்கள உதவி ஆணையாளர் க.கனகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

வாகன வசதிகளும் போதுமானதாக இல்லாததால் ஒரு சில வேலைகளை மேற் கொள்வதற்கு நீண்டநாள்கள் எடுப்பதாகவும் இந்த நிலை தொடருமாக இருந்தால் எர்காலத்தில் தாம் பாரிய நெருக் கடிகளை எதிர்நோக்க நேரிடும் எனவும் அவர் கூறினார். (த-ரி)

### விற்பனைக்கு

சகல வகையான கையடக்கத் தொலைபேசிகளும் அதற்கான உதிரிப்பாகங்களும் விற்பனைக்குண்டு. உங்கள் சொந்தப் பெயர்களுக்குச் சிம்காட்டும் வழங்கப்படும். பழுதுபார்த்தல் திருத்தும் சேவையும் உண்டு.

**யாழ். போன் சொப்**

10, நவீன சந்தை மேல்மாடி, ஆஸ்பத்திரி வீதி (றிற் ஸ்ரார் ஹோட்டலுக்கு முன்பாக), யாழ்ப்பாணம்.

## தூவல் மற்றும் துளி நீர் வழங்கல் செயல்முறை விளக்கம்

*யாழ்.நல்லூர் கமநல சேவை நிலையம் , திருநெல் வேலி மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையம் ஜெயின் இரிகேஷன் ஸிஸ்டம்ஸ் - இந்தியா ஆகிய நிறுவனங்களு டன் இணைந்து கொழும்பு ஜினசேனா கம்பெனியும் கிளி நொச்சி வன்னிவேளான் தொழில்நுட்ப நிறுவனமும் இணைந்து யாழ்.மாவட்ட வேளான் செய்கையாளருக்கான துளி மற்றும் தூவல் நீர் வழங்கல் செயல் முறை விளக்கம் அளிக்க வுள்ளனர்.*

25.08.2005 வியாழன் முற்பகல் 10 மணிக்கு
கரவெட்டி கமநல சேவை நிலையம், புலோலி

நண்பகல் 2 மணிக்கு
புத்தூர் கமநல சேவை நிலையம், புத்தூர்.

பிற்பகல் 4 மணிக்கு
கீரிமலை கமநல சேவை நிலையம், மாசியப்பிட்டி

*விவசாயப் பெருமக்கள் அனைவரும் கலந்து பலன்பெறுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.*

- ஏற்பாட்டாளர்கள்.

(39241)(26.14.15)

### காணியுடன் கூடிய வீடு விற்பனை

**மல்வம், உடுவில் வின்சன் கடையடியில் 2¼பரப்புக் காணியுடன் கூடிய சகல வசதிகளுடனும் அமைந்த வீடு விற்பனைக்குண்டு.**

தொடர்பு: **ஜோர்ஜியா**
T.P: 0777448093. (39218)(26)

## சமூகசேவகி இ.சைலா அவர்கள்



நோபல் பரிசிலுக்குச் சிபார்சு செய்யப்பட்டமைக்கான

**பாராட்டு விழா**

இடம்:
**மகாத்மா விளையாட்டு அரங்கு**

நாள்:
*25-08-2005 வியாழக்கிழமை*

நேரம்:
**பிற்பகல் 2.30 மணி**





தலைவர்:
திரு.இ.பாலச்சந்திரன் (மகாத்மா ச.ச.நி. தலைவர்)

விழா நாயகி:
சமூக சேவகி **திருமதி இ.சைலா**
[தலைவர், தாரகா விதவைகளுக்கான மலர்வு மையம்]

பிரதம விருந்தினர்:
பேராசிரியர் தயா சோமசுந்தரம் M.D., FRCPsych
[உளநல வைத்திய நிபுணர் - யாழ். போதனா வைத்தியசாலை ஆலோசகர், விதவைகளுக்கான உதவித் திட்டம் - சாந்திகம்]

சிறப்புவிருந்தினர்:
வண.பிதா C.G.ஜெயக்குமார் [இயக்குநர் - கியூடெக் நிறுவனம்]
பேராசிரியர் V.நித்தியானந்தன்
(பொருளியல்துறை, யாழ். பல்கலைக்கழகம்)

கௌரவவிருந்தினர்:
திரு.S.நாகையா [அதிபர் - அ.மி.த.க. பாடசாலை, ஆனைக்கோட்டை]
யோ.கலைவிழி [யாழ். மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர்]
திரு.பி.இராசரத்தினம் [முன்னாள் கிராம அபிவிருத்திச் சங்க ச.ச. நிலையத் தலைவர்]
திரு.சி.சுதந்திரன் [அதிபர், சென்.பீற்றேர்ஸ் றோ.க.த.க. பாடசாலை]

பதிலுரை: விழா நாயகி **திருமதி இ.சைலா**

**கலை நிகழ்வுகள் இடம்பெறும்.**

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

**மகாத்மா சனசமூக நிலையம் - சாவல்கட்டு.**

(39238) (24-26-14-15)

## ஒரு வருட பூர்த்தியில்...

**யாழ். மண்ணில் லேசர் டிஜிட்டல் தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்தி ஒரு வருட பூர்த்தியை விரைவில் கொண்டாடவுள்ளோம். இதனை முன்னிட்டு -**

* 01-09-2005 முதல் எம்மிடம் புகைப்படச் சுருள்களை பிரதியாக்கம் செய்பவர்களுக்கு (Studio) இலவசமாக அல்பங்களைக் கட்டித் தருகின்றோம்.
* படங்களை இலவசமாக CD யில் பதிவுசெய்து தருகின்றோம்.
* மிகக் குறைந்த கட்டணத்தில் டிசைனிங், பிரிண்டிங்
* நல்லூர் கந்தன் உற்சவத்தை முன்னிட்டு வியாபார நிறுவனங்களுக்கான 06 அடி அகலத்தில் பனர்கள், டிஜிட்டல் போட் என்பவற்றைக் குறைந்த கட்டணத்தில் செய்து தருகின்றோம்.
* உங்கள் இல்லங்களில் நடைபெறுகின்ற அனைத்து மங்களகரமான நிகழ்வுகளையும் டிஜிட்டல் வீடியோ, போட்டோவாகப் பிடித்துத் தருகின்றோம்.

**ஸ்ரீத்தி லேசர் டிஜிட்டல் கலர் லாப்**

T.P.: 2222884.

கிளை: யாழ். வீதி, மானிப்பாய்.

(C/44595)(38.14.15.26)

## கார் வாடகைக்கு (குளிரூட்டியது)

ஆங்கில இலக்கம் கொண்ட புத்தம் புதிய கார் வாடகைக்கு உண்டு



* திருமண வைபவங்கள்
* சுற்றுலாக்கள்
* விஷேட வைபவங்கள்

ஆகிய அனைத்துத் தேவைகளுக்கும் எம்மை நாடலாம்.

**தொடர்பு: 0777312690, 0777222180, 0777283595, 021 222 6634.**

முகவரி: **பாம்பீச் ரெஸ்ரோறன்ற்,**
49, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(39243)(26-14-15)

## பெருவிமான விபத்தில் 41 பேர் பலி!




விமா,ஓக.25

பெரு நாட்டில் புகால்பா விமான நிலையம் அருகே அந் நாட்டு அரசுக்குச் சொந்தமான விமானம் விபத்துக்குள் ளானது. இதில் 41 பேர் பலியானார்கள்.

கடந்த செவ்வாய்க்கிழமை இவ்விபத்து நடந்தது. அந்த விமானம் தலைநகர் லிமாவிலிருந்து புகால்பாவுக்குச் சென்று கொண்டிருந்தது. 92 பயணிகளும் 8 சிப்பந்திகளும் ஆக மொத்தம் 100 பேர் புதிய பயணம் செய்தனர்.

புகால்பா விமான நிலையத்தை நெருங்கியபோது பலத்த சூறைக்காற்றுடன் மழை பெய்தது. எனவே விமானம் தரை இறங்கமுடியாமல் விமான நிலையத்தின் மேலே வட்டமடித் துக் கொண்டிருந்தது. இது பற்றிச் சம்பந்தப்பட்ட அதிகாரி களுக்கு விமானி தகவல் தெரிவித்தார்.

விமானத்தில் எரிபொருள் முடியும் சூழ்நிலை ஏற்பட்ட போது விமான நிலையத்தில் அருகே உள்ள சதுப்பு நிலத்தில் விமானி தரை இறக்க முயன்றார்.

ஆனால் பலத்த காற்றில் அலைக்கழிக்கப்பட்டதால் திடீரென்று விமானம் சதுப்பு நிலத்தில் வீழ்ந்துநொறுங்கியது.

இதில் 41 பேர் பலியானார்கள். காயமடைந்த 56 பேர் பல்வேறு மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

உலக அரங்கில்

## இந்தியக் கடற்படைக்கு துணைத் தளபதி

இந்தியக் கடற்படையின் புதிய துணைத் தளபதியாக வைஸ் அட்மிரல் வெங்கட் பர்தான் நியமிக்கப்பட்டார். தற்போதுகடற்படைத் துணைத் தள பதியாக உள்ள யஷ்வந்த் பிரசாத் ஒக்டோபர் 31இல் ஓய்வு பெறுவதை யடுத்தே இவர் நியமிக்கப்பட்டார்.

# ஈராக்கில் அரசமைப்பை ஏற்கும்படி சுனி' முஸ்லிம் மீது அமெ.அழுத்தம்

பக்தாத்,ஓக.25

ஈராக்கில் சமஷ்டி முறையை ஏற்குமாறு சுனி பிரிவு முஸ்லிம்களுக்கு அமெரிக்கா அழுத்தம் கொடுத்துள்ளது. வன்முறையா? சமாதானமா? எது வேண்டும் என்பதை சுனி முஸ்லிம்கள் தீர்மானிக்க வேண்டும் என்று அமெரிக்க அதிபர் புஷ் தெரிவித்தார்.

ஈராக்கில் கடந்தாண்டு அமெரிக்க - பிரிட்டிஷ் கூட்டுப் படைகளால் சதாம் ஆட்சி நீக்கப்பட்டது. சில மாதங்களுக்கு முன் அங்கு பொதுத் தேர்தல் நடந்தது. ஈராக்கிற்குப் புதிதாக அரசமைப்பு இயற்றப்படவுள்ளது. அதற்காக, குழு அமைக்கப்பட்டது. குர்திஷ், ஷியா முஸ்லிம் பிரதிநிதிகள் இதில் இடம்பெற்றனர். அரசியல் சட்ட நகலை இக்குழு தயாரித்தது.

இஸ்லாம் அடிப்படையில் அரசியல் சட்டத்தை இயற்ற, ஷியா பிரிவு பிரதிநிதிகள் முக்கியத்துவம் தந்தனர். பெண்களுக்கும், சிறுபான்மையினருக்கும் அரசியல் சட்டத்தில் சம உரிமை அளிக்க வேண்டும். என்று குர்திஷ் இனப் பிரதிநிதிகள் வலியுறுத்தினர். இதனால், குழுவில் கருத்து வேறுபாடு ஏற்பட்டது.

ஷியா - குர்திஷ் பிரதிநிதிகள் இடையே ஏற்பட்ட அக் கருத்து வேறுபாடு நீக்கப்பட்டு ஈராக் நாடாளுமன்றத்தில் அரசியல் சட்ட நகல் தாக்கல்செய்யப்பட்டது.

ஆனால், இந்த அரசமைப்புச் சட்ட நகலை சிறுபான்மையினரான சுனி முஸ்லிம்கள் ஏற்க மறுத்துள்ளனர்.

சதாம் அதிபராக இருந்தபோது அதிகாரங்கள் அவரிடமே குவிந்திருந்தன. உத்தேச அரசமைப்புச்சட்ட வரைபில் ஷியா, சுனி மற்றும் குர்திஷ்கள் செறிந்து வாழும் பிரதேசங்களுக்குச் சுயாட்சி வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. இதனை ஷியா மற்றும் குர்திஷ்கள் ஏற்றுக்கொண்டனர்.

நாட்டின் பெற்றோலிய வளத்தால் கிடைக்கும் வருமானம் தமக்கு கிடைக்காமல் போக சமஷ்டி முறை வழிவகுக்கலாம் என்று சுனி முஸ்லிம்கள் அஞ்சுகின்றனர். ஏனெனில் ஷியா, குர்திஷ் பகுதிகளிலேயே பெற்றோலிய வளம் உள்ளது. இதனால் சுனி முஸ்லிம்கள் சமஷ்டி முறையை எதிர்க்கின்றனர். இவர்களைச் சமாதானப் படுத்தி உத்தேச அரசமைப்பை ஏற்கச்செய்வதில் அமெரிக்க அதிபர் புஷ்ஷூம் ஈராக்கியத் தலைவர்களும் ஈடுபட்டுள்ளனர்.

சுனி முஸ்லிம்களின் எதிர்ப்புக் காணரமாக அரசமைப்புச் சட்டவரைபு மீதான நாடாளுமன்ற வாக்கெடுப்பு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

## சுனாமி ஏற்படுத்திய தாக்கத்தால் தமிழகத்தில் கடற்கொந்தளிப்பு

### ஆய்வு நிபுணர் தகவல்

சென்னை,ஓக.25

ஆழிப்பேரலை ஏற்படுத்திய மாற்றமே தமிழகக் கடற் கொந்தளிப்பிற்குக் காரணம் என்று சென்னை அண்ணா பல்கலைக்கழகக் கடல் ஆய்வு மைய இயக்குநர் எஸ். இராமச்சந்திரன் தெரிவித்தார்.

தமிழகத்தின் கிழக்குக் கடல் கடந்த சில நாள்களாகத் தொடர்ந்து கொந்தளித்துவருகிறது. இதனால், கடல்நீர் குடியிருப்புகளுக்குள் புகுந்தது. இதில் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

கடல் கொந்தளிப்புக் குறித்து வானிலை ஆய்வுமையமோ இந்திய அறிவியல் தொழில் நுட்பத்துறையோ தெளிவான தகவலெதனையும் வழங்கவில்லை.

இந்நிலையில் சென்னை அண்ணா பல்கலைக்கழக கடல்ஆய்வு மைய இயக்குநர் எஸ்.இராமச்சந்திரன் கூறியதாவது:

ஆழிப்பேரலை தாக்கிய போது கடற்கரையில் பெரும் மாற்றங்கள் நிகழ்ந்தன. கடற்கரையில் குன்றுபோல் குவிந்து கிடந்த மணல் திட்டுகள் கடலுக்குள் அடித்துச் செல்லப்பட்டன. இதனால், கடலோரப் பகுதியில் இருந்த தரைப் பகுதி குறைந்து தட்டையாக மாறிவிட்டது. இதன் காரணமாகவே அமாவாசை, பௌர்ணமி நாள்களில் கடல் கொந்தளித்து வேகம் அதிகரிக்கும்போது கடல்நீர் எளிதில் ஊருக்குள் புகுந்து விடுகிறது- இவ்வாறு அவர் கூறினார். (ஓ)

## இந்தியக் கைதியை விடுவிக்க முயற்சி

இந்தியரான சரப்ஜித் சிங்கை பாகிஸ்தான் அரசு கைது செய்து சிறையில் அடைத்துள்ளது. பாகிஸ்தானுக்கு எதிராக உளவுபார்த்ததாக அவருக்கு அந்நாட்டு நீதிமன்றம் மரண தண்டனை விதித்துள்ளது. இதைத் தொடர்ந்து சரப்ஜித் சிங்கின் உறவினர்கள் இந்தியப் பிரதமரிடம் நடவடிக்கை மேற்கொள்ளும்படி கேட்டுக்கொண்டனர். இதையடுத்து சரப்ஜித் சிங் தொடர்பாக பாக்., பிரதமர் முஷாராப்பிடம் தாம் விரைவில் பேசுவதாக இந்தியப் பிரதமர் தெரிவித்தார். இதற்கிடையே தனியார் தொலைக்காட்சிக்கு பேட்டியளித்த பாகிஸ்தான் அமைச்சர் முகமது கசூரி, சரப்ஜித் சிங் தொடர்பான மனு பரிசீலிக்கப்படும் என்று தெரிவித்துள்ளார்.

# கட்சியை வலுப்படுத்த விஜயகாந்த் தமிழகம் முழுவதும் சுற்றுப்பயணம்

சென்னை,ஓக.25

தனது அரசியல் கட்சியை வலுப்படுத்த டிசெம்பரில் தமிழகம் முழுவதும் சுற்றுப் பயணம் மேற்கொள்ளப்போவதாக நடிகர் விஜயகாந்த் கூறினார்.

அவரது பிறந்ததினம் இன்றாகும். அதனை முன்னிட்டு கல்வி நிறுவனங்களுக்கு நல உதவிகளை வழங்கினார் விஜயகாந்த்.

இதற்கான விழாவில் விஜ்யகாந்த் கூறியதாவது:-


மதுரையில் நடைபெறவுள்ள அரசியல் மாநாட்டுப் பணிகள் 70 சதவீதம் நிறைவு பெற்றுள்ளன. மன்ற உறுப்பினர்களிடம் குறைந்த கட்டணம் வசூலிக்கப்படும். மாநாட்டுக்கு வரும் பொது மக்களுக்கும் கட்டணம் நிர்ணயிக்கப்படும்.

கட்சியின் பெயரை நான்தான் முடிவு செய்வேன். டிசெம்பரிலிருந்து தமிழகம் முழுவதும் சுற்றுப்பயணம் செய்து மக்களைச் சந்திப்பேன்.

நான் எந்தக் கட்சியுடனும் கூட்டணி வைத்துக்கொள்ளமாட்டேன். அவர்களாக யாராவது வந்தால் வரட்டும் என்று கூறினார் விஜயகாந். (ஓ)

## மேற்கு கரையில் இஸ்ரேல் ராணுவம்!

பலஸ்தீனத்தில் காசாமுனையில் வசித்த யூதர்களை முழுமையாக வெளியேற்றிய இஸ்ரேல் ராணுவம், மேற்கு கரையில் நேற்று முன்தினம் புகுந்தது. அங்குள்ள இரண்டு குடியிருப்புகளை அது காலி செய்து வருகிறது. யூத குடும்பங்கள் வெளியேற்றப்படுவதை தடுக்க, இஸ்ரேலில் இருந்து ஊடுருவிய போராட்டக்காரர்கள் இங்கு தங்கியுள்ளனர். யூத திருக்கோயில்களிலும், மத அமைப்புகளிலும் அவர்கள் முகாமிட்டுள்ளனர். காசாமுனையை காலி செய்த இஸ்ரேல் ராணுவமும், பொலீசாரும் நேற்று முன்தினம் காலை இவ்விரு இடங்களிலும் நுழைந்தனர். யூதர்களை காலி செய்யும் பணியில் ராணுவ வீரர்களும், பொலீசாரும் ஈடுபட்டனர். 'வெளியேற மாட்டோம்' என்று பல பெண்கள் கண்ணீருடன் கதறினர். இருப்பினும், வீரர்களின் பணி தொடர்கிறது.



சுவிற்ஸர்லாந்தில் பலத்த் மழை பெய்து வருகிறது. பேர்ண் நகரம் முழுவதுமே வெள்ளத்தால் சூழப்பட்டுள்ளது.

## சுனாமி எச்சரிக்கை அமைப்புமுறையை சீர்செய்து ஆரம்பித்தது அமெரிக்கா

இந்தியப் பெருங்கடல் பகுதியில் ஆழிப்பேரலை தாக்கினால் அதுபற்றி முன்பே துல்லியமாக கண்டறிவதற்கான எச்சரிக்கை அமைப்பு முறையை அமெரிக்கா சீர் செய்துள்ளது. இதனால், இந்திய பெருங்கடல் பகுதிகளில் ஆழிப் பேரலை தாக்கும் அபாயம் குறித்து முன்பே தகவல் அறிந்துகொள்ளவும், சம்பந்தப்பட்ட நாடுகளை எச்சரிக்கவும் முடியும்.

ஆழிப்பேரலை தாக்கும் அபாயத்தை அறிந்துகொள்ள ஏற்கனவே அமெரிக்காவில் வசதிகள் இருந்தாலும், ஆசியப் பகுதிகளில் ஆழிப்பேரலை தாக்கிய போது அதுபற்றிய தகவலை அமெரிக்க அமைப்புகள் முன்பே தரவில்லை. துல்லியமாகக் கண்டறிந்துதெரிவிக்கவில்லை.

அந்தக் குறையைப் போக்கும் வகையில் தற்போது இந்தியப் பெருங்கடல் பகுதிக்கான ஆழிப்பேரலை எச்சரிக்கை அமைப்பை அமெரிக்கா ஆரம்பித்துள்ளது. அமெரிக்க சர்வதேச மேம்பாட்டு நிறுவனத்தின் உதவியுடன் இது அமைக்கப்பட்டுள்ளது. (ஓ)

# நடிகையின் புகைப்படத்தைக் காட்டி வாலிபரிடம் பணம் பறித்த இளம்பெண்



பூங்கொடி

சென்னை,ஓக.25

நடிகையின் புகைப்படத்தை தன்னுடைய புகைப்படம் என்று காண்பித்து கனடா வாலிபரிடம் 5 லட்சம் ரூபாவை அபகரித்தார் தமிழகத்தைச் சேர்ந்த இளம் பெண்.

இது பற்றி கூறப்படுவதாவது:-

கனடாவில் வசிப்பவர் டெரன்ஸ் சௌந்தர் (வயது 30) இவர் இணையத்தளம் ஊடாக பிறருடன் பேசுவதை (சாட்டிங்) பொழுது போக்காகக் கொண்டிருந்தார்.

ஒருமுறை இவருக்கு இணையத்தளம் ஊடாக தமிழகத்தைச் சேர்ந்த இளம்பெண் ஒருவருடன் தொடர்பு கிடைத்தது. தனது பெயர் அர்ச்சனா வயது 22 கணனித் துறையில் சாதிக்க விரும்புகின்றார் என்றெல்லாம் அப் பெண் தெரிவித்தார். அவரது புகைப் படம் என்று கூறி ஒன்றையும் மின்னஞ்சல் ஊடாக அப் பெண் அனுப்பிவைத்தார். புகைப்படத்திலிருந்த யுவதியின் அழகைக் கண்டு வியந்தார் சௌந்தர். இதனைத் தொடர்ந்து அப்பெண்ணின் தொலைபேசி இலக்கத்தைப் பெற்ற சௌந்தர் பலதடவைகள் அவருடன் பேசினார். அப்போது தனது தாயார் பிரபல மருத்துவர் என்றும், தந்தை சட்டத் தரணியென்றும் கூறிய அர்ச்சனா உயர் கல்விச் செலவுக்கு பணமின்றித் தவிப்பதாகக் கூறியுள்ளார். அதைக் கேட்டு இரங்கிய சௌந்தரிடம் பணத்தை தனது தோழி பூங்கொடியின் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு அர்ச்சனா கூறினார்.

அன்றிலிருந்து பல தடவைகள் பணம் அனுப்பினார் சௌந்தர்.

இந்நிலையில் கனடாவிலிருந்து தமிழகம் வரமுடிவுசெய்த சௌந்தரிடம் தான் வெளிநாடு செல்வதாகவும் தனது தோழி பூங்கொடியை சந்திக்கும்படியும் அர்ச்சனா கூறினார். தமிழகம் வந்து கோவைசென்ற சௌந்தரும் பூங்கொடியைச் சந்தித்து அர்ச்சனாவிற்காக வாங்கி வந்த இலத்திரணியல் பொருள்கள் உட்பட விலை உயர்ந்த அன்பளிப்புகளைக் கொடுத்துவிட்டு சென்னை திரும்பினார்.

சென்னையில் தனது நண்பரிடம் தான் வந்த காரணத்தைக் கூறிய சௌந்தர் அர்ச்சனாவின் புகைப்படத்தையும் காட்டினார். அதைக்கண்ட நண்பர் அதிர்ச்சியடைந்தார். காரணம் புகைப்படத்தில் இருந்தவர் பிரபல நடிகை அசின் 'எம். குமரன் சன் ஒவ் மகாலட்சுமி, உள்ளம் கேட்குமே' ஆகிய படங்களில் நடித்தவர்.

உண்மை தெரிந்த சௌந்தர் பொலீஸாரிடம் முறையிட்டார். இந்தியப் பெறுமதியில் ஒரு லட்சத்து 20 ஆயிரம் ரூபா பணம், ஒரு லட்சத்து 25 ஆயிரம் ரூபா அன்பளிப்புகளை அர்ச்சனாவுக்கு கொடுத்ததாக முறைப்பாட்டில் அவர் குறிப்பிட்டிருந்தார்.

இதனையடுத்து அர்ச்சனாவின் தோழி பூங்கொடியை தேடிக்கண்டு பிடித்த பொலீஸார் அவரிடம் விசாரணை நடத்தினர். அப்போது அதிர்ச்சித் தகவல் வெளியானது.

பொலீஸ் விசாரணையில் அர்ச்சனா என்று எவருமில்லை. தானே நடிகை அசினின் புகைப்படத்தை அர்ச்சனா என்ற பெயரில் அனுப்பி நாடகமாடி சௌந்தரிடம் பணம் கறந்தார் என பூங்கொடி ஒப்புக்கொண்டார்.

ஏற்கனவே திருமணமாகி கணவனைப் பிரிந்து வாழும் பூங்கொடி (வயது 30) மீது பொலீஸார் வழக்குத் தொடர்ந்துள்ளனர். (ஓ)



போர்த்துக்கல் நாட்டின் மத்திய மற்றும் வடக்குப் பிரதேசங்களில் மூண்டுள்ள காட்டுத் தீயால் பெரும்பாதிப்பு ஏற்பட்டுள்ளது. நாட்டின் மூன்றாவது பெரிய நகரான கொய்ம்ராவின் எல்லையை காட்டுத் தீ நெருங்குகிறது. நகருக்குள் தீ பரவாது தடுக்க தீயணைப்பு விரர்கள் போரடி வருகின்றனர்.

## வட கிழக்கு கரையோர சமுதாய அபிவிருத்தித் திட்டத்தின் (NECCDEP) கீழான சுனாமியினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களின் மீள்பலப்படுத்தல் திட்டம் (TAARP)

### மாவட்ட திட்ட அலுவலகம் புனரமைத்தலுக்கான கேள்வி கோரல்

மேற்படி திட்டத்தின் கீழ் மாவட்ட கேள்விச்சபையினால் பின்வரும் வேலைக்காக கேள்விகள் வரவேற்கப்படுகிறது.

| இல. | ஒப்பந்த இலக்கம் | ஒப்பந்த வேலை விவரம் | இக்ராட் | மீளளிக்கப்படாத தொகை | மீளளிக்கப்படும் தொகை |
|---|---|---|---|---|---|
| 1 | KN/TAARP/ 0FF/2005 | மாவட்ட திட்ட அலுவலகம் புனரமைத்தல் | M9 | 500.00 | 5000.00 |

1. ஆர்வமுடைய ஒப்பந்தகாரர்கள் கேள்விப்படிவங்களையும் மேலதிக தகவல்களையும் மாவட்ட பிரதித் திட்டப் பணிப்பாளர் வடகிழக்கு கரையோர சமுதாய அபிவிருத்தித் திட்டம் கச்சேரி, கிளிநொச்சி என்ற முகவரியுடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ள லாம்.
2. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 03.09.2005 ஆம் திகதி 3.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக **தலைவர், கேள்விச்சபை, கரையோர சமுதாய அபிவிருத் தித் திட்டம் கச்சேரி, கிளிநொச்சி** என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அல்லது நேரடியாகவோ அனுப்பப்படல்வேண்டும் . கேள்விகள் யாவும் அன்றே பரிசீலிக்கப்பட்டு தீர்மானிக்கப்படும். கேள்விச்சபை கூடும் பொழுது விண்ணப்பித்த ஒப்பந்தகாரர் அல்லது அவரது பிரதிநிதிகள் சமுகமளித்தல் வேண்டும்.

குறிப்பு

விண்ணப்பப்படிவம் அனுப்பப்படும் தபால் உறையின் இடதுபக்க மூலையில் ***"மாவட்ட திட்ட அலுவலகம் புனரமைத்தலுக்கான கேள்வி விண்ணப்பம்"*** எனக் குறிப் பிடல் வேண்டும்.

தி.இராசநாயகம்
*மாவட்ட கேள்விச் சபைத் தலைவரும்*
*அரச அதிபரும்*
**கிளிநொச்சி.**

(சி-44762)(21-19-45)


# பொதுஜன முன்னணி கட்சிகள் மஹிந்தவுக்கு ஆதரவு தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 25

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளரான மஹிந்த ராஜபக்ஷவிற்கு ஆதரவைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் ஜே.வி.பி, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் உட்பட பல கட்சிகளுக்கும் சு. கட்சி வலைவீசி வருகின்றது. இது தொடர்பான பேச்சுகள் நடத்தப்படுகின்றன என துறைமுக, விமான சேவைகள் அமைச்சர் மங்கள சமரவீர நேற்று முன்தினம் தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தலில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிற்கு ஆதரவு தெரிவித்து பொதுஜன ஐக்கிய முன்னணியில் அங்கம் வகிக் கும் கட்சிகளின் தலைவர்கள் நேற்று முன்தினம் செய்தியாளர் மாநாடு ஒன்றை நடத்தினர்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச்செயலாளர் சுசில் பிரேம ஜயந்த, பொதுஜன ஐக்கிய முன்னணியின் பொதுச் செய லாளர் டி.எம். ஜயரட்ன, ஈ.பி.டி.பி தலைவர் டக்ளஸ் தேவானந்தா, தேசிய முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஏ.எல்.எம். அதாவுல்லாஹ், தேசிய ஐக்கிய முன்னணியின் பிரதித் தலைவர் சேகு இஸ்ஸதீன், மக்கள் ஐக்கிய முன்னணியின் தலைவர் தினேஷ் குணவர்த்தன, சமசமாஜ கட்சியின் முக்கியஸ்தரான திஸ்ஸ விதாரண, கம்யூனிஸ்ட் கட்சியின் செயலாளர் டியூ குணசேகர ஆகியோர் இந்தச் செய்தியா ளர் மாநாட்டில் பிரதமருக்கான தமது ஆதரவைத் தெரிவித்து உரை யாற்றினர். இந்தச் செய்தியாளர் மாநாட்டில் அமைச்சர் மங்கள சமர வீர மேலும் கூறியதாவது:-

ஜனாதிபதித் தேர்தலில் எமது கட்சியின் வேட்பாளர் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை ஆதரிப்பதற்குப் பல கட்சிகள் உறுதியளித் துள்ளன. அந்தக் கட்சிகள் எவை என்பதை நாம் படிப்படியாக அறிவிப்போம். ஜே.வி.பி. எமது கூட்டணியிலிருந்து விலகினாலும் கூட்டணிக் கட்சி என்ற இடத்திலிருந்து ஜே.வி.பியின் பெயர் நீக்கப்படவில்லை.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், ஜே.வி.பி. ஆகிய கட்சிகளின் ஆதரவைப் பெற்றுக் கொள்வது தொடர்பில் பேச்சுகள் நடத்தப்பட்டு வருகின்றன. அவை வெற்றியளிக்குமென நாம் உறுதியாக நம்புகிறோம். - இவ்வாறு அமைச்சர் மங்கள மேலும் கூறினார்.

# சேது கால்வாய் திட்டத்தை எதிர்த்து கொழும்பில் ஆர்ப்பாட்டம்

கொழும்பு ,ஓக.25

இந்தியாவின் சேது கால்வாய் திட்டத்திற்கு எதிர்ப்புத் தெரி வித்து நேற்று முன்தினம் கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெற்றது.

சேது கால்வாய் திட்டத்திற்கெதிராக மக்கள் இயக்கம் ஏற்பாடு செய்திருந்த இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டோர், சேது கால்வாய் திட்டம் உடனடியாகக் கைவிடப்படவேண்டுமெனக் கோரிக்கை விடுத்தனர்.

இந்தத் திட்டத்தின் மூலம் இலங்கையில் வாழும் ஒவ்வொரு மக்களும் பாதிக்கப்படுவார்கள் எனவும், எனவே அனைத்து இலங் கையர்களும் இதனை எதிர்க்கவேண்டுமெனவும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் வலியுறுத்தினார்கள்.

இந்தியாவின் தமிழ் நாட்டிலுள்ள 15 லட்சத்துக்கும் அதிகமான மீனவர் களும் இந்தத் திட் டத்தினால் பாதிக் கப்படுவார்கள். ஆயினும் இந்திய மத்திய அரசு பிடி வாதப் போக்கையே கடைப்பிடித்து வரு கின்றது என சேது கால்வாய்த் திட்டத் திற்கு எதிரான மக் கள் இயக்கம் குற்றஞ் சாட்டியுள்ளது. (8)


## 21ஆம் நாள் ஓயா நினைவுகளில்....



### அமரர் நல்லதம்பி பொன்னுத்துரை

மண்ணில் 20-10-1939
விண்ணில் 05-08-2005

*வாழ்க்கைப் பாதையினிலே தென்றல் வீசும் வேளையிலே - புயலாக*
*இயற்கையும் காலமும் நமக்கு எதிராய் சதி செய்தது*
*எம் ஆருயிர் அப்பாவே இன்னமும் அழியாத உயிர் ஓவியமாய்*
*எங்கள் நெஞ்சங்களில் பிரிந்த பின்பும் கடந்த நினைவுகளுடன்*
*என்றும் மங்காத ஒளியாக வாழ்ந்தாலும்*
*இங்கு நாம் போராடியே தோற்று*
*கண்ணீரே இல்லாத கண்களுடன்*
*உயிரிருந்தும் ஜடமான உடலுடன்*
*விம்முகிறோம் விசும்புகிறோம்.*

எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்தி மீளாத்துயர் கொண்ட எங்கள் அன்புத் தெய்வத்தின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (25.08.2005) வியாழக் கிழமை கீரிமலை புண்ணிய தீர்த்தக் கரையிலும் 27.08.2005 சனிக் கிழமை வீட்டுக்கிருத்தியக் கியைகளிலும் அதனைத் தொடர்ந்து நடை பெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்.

மில் ஒழுங்கை,
மல்லாகம்.
(39257)(42.19.45.21)



## கண்ணீர் அஞ்சலி

*எமது அலுவலகத்தில் கடமையாற்றும்*
*திரு.வி.அமிர்தலிங்கம் அவர்களின் அன்புத் தந்தை*
**க.விஸ்வலிங்கம்**
*அவர்களின் மறைவுக்கு எங்கள் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.*


கணக்காளரும் அலுவலக உத்தியோகத்தர்களும்
ஊழியர்களும்
**தபால் திணைக்களம், யாழ்ப்பாணம்.**
(39256)
(39.21.19.45)



## மரண அறிவித்தல்

### ஆசிர்வாதம் ஞானப்பிரகாசம்

*(இளைப்பாறிய சாரதி - யாழ்.மாநகரசபை)*



இளவாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிட மாகவும் கொண்ட ஆசிர்வாதம் ஞானப்பிரகாசம் 21.08.2005 ஞாயிற்றுக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் ஸ்ரெலாவின் அன்புக் கணவரும் சந்திரா (இளவாலை), மக்ஸி (இத்தாலி), அன்ரன் (யாழ்.மா.ந.ச), இந்திரா (இந்திரா ஸ்ரோர், இள வாலை), சுவேந்திரா (பிரான்ஸ்), சுரேஸ் (டோகா), றொபேட் (இத்தாலி), றமேஸ் (இளவாலை) ஆகி யோரின் பாசமிகு தந்தையும் மரியதாஸ் (இள வாலை), சாந்தி (இத்தாலி), ஜீன் (யாழ்ப்பாணம்), பேரின்பம் (சவூதி), தேவன் (பிரான்ஸ்), உமா (நீர் கொழும்பு), கவிதா (இத்தாலி) ஆகியோரின் அன்பு மாமனும் வினோ (ஜேர்மனி), டெனி, டனிஸ், டிமன், நிரோஸ், தனுஷா, டினோஷா, கவோனி, வினி, அனோ, லோஷன், தனு, யனு, ஸ்ரெவானி (பிரான்ஸ்), பிரசன்னா, ஜெனிபர், ஜினோ (இத்தாலி), றெபேக்கா எயூசி (நீர்கொழும்பு) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆரோன், றொகான் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புப் பூட்டனும் காலஞ்சென்ற திரேசம்மாவின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (25.08.2005) வியாழக்கிழமை பிற்பகல் 4 மணியளவில் அவரது இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு, புனித யூதாததேயு ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு, புனித யூதாததேயு சேமக்காலையில் நல்லடக்கஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சென் யூட்,
இளவாலை, யாழ்ப்பாணம். (39244)(21.19.45.26)

தகவல்: **குடும்பத்தினர்.**
T.P.: 0777 462120, 0779174260.

## தொடர்பு கொள்ளவும்



தமிழகத்தில் இருந்து கலை மாமணி தவில் சக்கரவர்த்தி, கரவேக ஞனபூபதி, தவில்சுடர் திருவாவடுதுறை ஆஸ்தானவித்துவான் மன்னார் குடி MR.வாசுதேவன் யாழ். நகரில் 25/08/2005 தொடக்கம் 02/09/2005 வரையும் தங்கவுள்ளார். தவில் ரசிகர்கள் தங்கள் கோயில் - திருமண வைபவங்கள் இருந்தால் அவரை தொடர்பு கொண்டு கச்சேரி நடத்த முடியும் என்பதை அறியத் தருகின்றேன்.

தொடர்பு:
காரை கணேசன் பவப்பிரியன் பவன்
மருதடி காரைநகர். 0776164878
(C/44774)(38-18-12)

## நிலவு.com 15% - 30% வரை

ஆச்சரியப்படவைக்கும் சலுகைகள்
நல்லூர் உற்சவகால பணிமனையில்

புதிய CD வெளியீடு:
திருவாசகம் (51 பதிகமும்- ஒலி, தமிழ்-ஆங்கில உரையுடன்)

சுயகற்றலுக்கான குறுவட்டுக்கள்
தமிழ் கற்றலுக்கான குறுவட்டுக்கள்
சிறுவர்களுக்கான கதைகள் - பாட்டுக்கள்

## பிற்போடப்பட்டுள்ளது

26.08.2005 அன்று பொஸ் அழகுக் கலை நிறுவனத்தினரால் நடத்தப்படவிருந்த அழகுக் கலை வகுப்புகள் தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளன. திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

தொடர்பு: ஆனந்தரமணன்
026 2224524 , 077 3053242,
077 6167729.
(C/44768)(38-18-12)


## கண்ணீர் அஞ்சலி

2004 'A' பிரிவு மாணவ குடும்ப நல உத்தியோகத்தர் செல்வி பி.நொயாலா யூலியட் அவர்களின் அன்புச் சகோதரன்

### செல்வன் பிலிப்பு குரூஸ்

அவர்களின் மறைவிற்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், போதனாசிரியர்கள், தாதிய மாணவர்கள்,
மாணவ குடும்பநல உத்தியோகத்தர்கள்,
உத்தியோகத்தர்கள், ஊழியர்கள்.

தாதியர் பயிற்சிப் பாடசாலை,
யாழ்ப்பாணம்.
(39267)(38-12-18)

## ஹாட்லியின் கண்ணீர் அஞ்சலி

### அமரர் வை.கா.சிவப்பிரகாசம்

மாணவனாக, ஆசிரியராக அழகு நடை நடந்துவந்து தமிழைத் தென்றலாக தூயமொழி பேசி இலக்கண, இலக்கியம் கற்றுத் தந்த பேராசான் நீண்டு தூங்கிவிட்டார். தமிழ் விக்கித்து நிற்கிறது. நாம் துவண்டு துவள்கிறோம்.

எம் இதய அஞ்சலிகள்

(சி-44772)(38-12-18)

ஹாட்லிக்கல்லூரி
பழைய மாணவர் மன்றம்.

## திருவள்ளுவர் சனசமூக நிலைய திறப்புவிழா

அராலி தெற்கு திருவள்ளுவர் ச.ச.சமூக கட்டடத் திறப்புவிழாவை முன்னிட்டு எதிர்வரும் 28.08.2005 ஞாயிற்றுக்கிழமை மு.ப. 6 மணியளவில் சைக்கிளோட்டம், மரதன் ஓட்டம் நடைபெற இருப்பதால் யாழ்.மாவட்ட அனைத்து வீரர்களையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம். மேலதிக விவரங்களுக்கு எமது நிலையத்தில் தொடர்புகொள்ளவும்.

அராலி தெற்கு,
வட்டுக்கோட்டை.(39273)(38-12-18)
நிர்வாகத்தினர்.

## மரண அறிவித்தல்

### ஆறுமுகம் பாலசிங்கம்



. மட்டுவிலைப் பிறப்பிடமாகவும் கேணியடி திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் பாலசிங்கம் அவர்கள் 24.08.2005 புதன்கிழமை காலமாகிவிட்டார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.08.2005) வியாழக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரிகைக்காக திருநெல்வேலி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கேணியடி, திருநெல்வேலி.
(39262)(38-18-12) ஆனந்தன்(பேறாமகன்).

## முன்பள்ளி விளையாட்டு

யாழ்ப்பாணம்,ஓக.25

புத்தூர் வடக்கு உதயநிலா முன்பள்ளி விளையாட்டுவிழா இன்று வியாழக்கிழமை பி.ப. ஒரு மணிக்கு நவக்கிரி அ.மி.த.க. பாடசாலைக்கு அருகில் நடைபெறவுள்ளது.

நிலையத் தலைவர் கி.தேவராசா தலைமையில்நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் வலி. கிழக்கு உதவிப் பிரதேச செயலர் அ.சாந்தசீலன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (9-204)

## வெளிவாரிப் பரீட்சை நேற்று ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஓக.25

யாழ். பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப் பதிவுகள் அலகின் கலை மற்றும் வணிக முதற்தேர்வுப் பரீட்சைகள்நேற்று கோப்பாய் ஆசிரிய பயிற்சி கலாசாலையில் ஆரம்பமாகின. (எ-12)

## கிளிநொச்சியில் தமிழிசை அரங்கம்

கிளிநொச்சி,ஓக.25

தென்னிந்தியாவிலிருந்து வருகைதந்திருக்கும் பாடகர்கள் கலந்துகொள்ளும் சிறப்புத் தமிழிசை அரங்கு இன்று வியாழக்கிழமை பி.ப. 4.30 மணிக்கு கிளிநொச்சி கலைபண்பாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கிளிநொச்சி நுண்கலைக் கல்லூரியின் ஏற்பாட்டில் இடம்பெறும் இந்நிகழ்வில், 'தீயினில் எரியாத தீபங்களே', 'சுட்டும் விரலால் சுட்டிக்காட்டு', 'நீண்ட வானைக் கேளு போன்ற புகழ்பெற்ற பாடல்களைப் பாடிய பாடகரும் திருச்சி லோகநாதனின் புதல்வருமான ரி.எல்.மகாராஜன் கலந்து கொள்கிறார். (9)

## அதிதிப்பேச்சாளர் தினநிகழ்வு

யாழ்ப்பாணம் ஓக,25

யாழ். றோட்டறிக்கழகம் நடத்தும் அதிதிப் பேச்சாளர் தினநிகழ்வு இன்று மாலை 5 மணிக்கு உதயன் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும். யாழ். பல்கலைக்கழக சட்டத்துறை விரிவுரையாளர் ம. சுதர்சன் மனித உரிமைகள் என்ற பொருளில் உரை நிகழ்த்துவார். (எ)

## வழங்கல் கட்டளை விநியோகம்

யாழ். மாவட்டத்திலுள்ள அனைத்து ப.நோ.கூ.சங்கங்கள் மூலம் இடம் பெயர்ந்த குடும்பங்களுக்கான ஏப்ரல், மே மாதங்களுக்கான இலவச உலருணவை எதிர்வரும் முதலாம் திகதி முதல் விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும்-

அதற்கு ஏற்ற வகையில் யாழ். மாவட்ட ப.நோ.கூ.சங்கங்கள் மேற்படி மாதங்களுக்குரிய வழங்கற் கட்டளைகளை யாழ். மாவட்டச் செயலக புனர்வாழ்வு புனரமைப்பு நல்லிணக்கச் செயலகத்தில் எதிர்வரும் 26 ஆம், 27ஆம் திகதிகளில் பெற்று 01.09.2005ஆம் திகதி ஒரே தடவையில் மேற்படி இரு மாதங்களுக்குமான விநியோக நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் மாவட்டச் செயலக உதவித் திட்டப்பணிப்பாளர் மருதலிங்கம் பிரதீபன் அறியத்தந்துள்ளார். (எ)


**ராஜா** யாழ்ப்பாணம்

காதல் புகழ் பரத், ரேணுகா மேனன் நடித்த
பெப்ரவரி 14
26 முதல் சியாம், அஸின், பூஜா, லைலா நடித்த உள்ளம் கேட்குமே
காட்சி நேரம்: 10.30,2.30, 6.30 (பு.நே.)
(சி-43380)

**மனோகரா** யாழ்ப்பாணம்

விக்ரம், சதா, விவேக், பிரகாஸ்ராஜ் நடித்த
அந்நியன்
காட்சிநேரம்: 10.30, 2.30, 6.30, 9.30. (பு.நே.)
(சி-44110)

**நாகம்ஸ்** சினிமா சுன்னாகம்



இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின அதிரடி வெளியீடாக இளம் புயல் ஜெயம் ரவி, ரேணுகா மேனன், வடிவேல் மற்றும் பலர் நடித்த
தாஸ் (சினிமா)
காட்சிகள்: 11.00, 3.00, 7.00, 10.00 (பு.நே).
(சி-41187)

**நாதன்ஸ் சினிமா** யாழ்ப்பாணம்.

சத்தியராஜ், நமிதா, வடிவேலுவின் நகைச்சுவைச் சித்திரம்
இங்கிலீஸ்காரன்
கா.நே.: 10.30,2.30,6.30,9.30. (பு.நே.)
(சி-43363)


## மரண அறிவித்தல்கள்

### திருமதி சிவஞானம் செல்லப்பா

(ஓய்வுபெற்ற கைப்பணி ஆசிரியர்)



கோப்பாய் வடக்கு, வராம்பற்றையைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவஞானம் செல்லப்பா அவர்கள் 23.08.2005 செவ்வாய்க்கிழமை ஜேர்மனியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளையதம்பி - வள்ளிஅம்மை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற செல்லப்பாவின் (ஓய்வுபெற்ற கூட்டுறவு பரிசோதகர்) அன்பு மனைவியும் ஜெயந்தி, காலஞ்சென்ற ஜெயந்திரன் மற்றும் மாலதி, ஜெயராணி, சிவசாந்தி, கலாநிதி ஆகியோரின் அன்புத் தாயாரும் ஸ்ரீசண்முகதேவ், ஜெகதீஸ்வரன், தர்மசீலன், நித்தியானந்தன், ராஜேந்திரம் ஆகியோரின் அன்பு மாமியாரும் கஜன், நிறைஞ்சா, சர்வயா, சாளினி, ஜாளினி, ஜானுயா, சங்கவி, விதுசா, கீர்த்தனா, பிரவீன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஜேர்மனியில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கோப்பாய் வடக்கு,
கோப்பாய்.
பொ.கதிர்காமநாதன் (பெறாமகன் - யா/தொழில்நுட்பக் கல்லூரி).
T.P.: 0049621312335 (ஜேர்மனி) (39269) (38-18-12)

### தம்பையா காசிநாதர்



போக்கறுப்பு, முள்ளியானைப் பிறப்பிடமாகவும் கரம்பகம், எழுதுமட்டுவாழை நிரந்தர வதிவிடமாகவும், கச்சாய் வீதி, கொடிகாமத்தை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட தம்பையா காசிநாதர் அவர்கள் நேற்று (24.08.2005) புதன்கிழமை அமரத்துவம் அடைந்துவிட்டார்.

அன்னார் சிவயோகத்தின் அன்புக் கணவரும் தவமணி, குலசிங்கம் (இந்தியா), குணசிங்கம் (அதிபர், யா/குடமியன் அ.த.க. பாடசாலை), புலந்திரன், இராசதுரை (பட்டதாரிப் பயிலுநர், பிரதேச செயலகம், சாவகச்சேரி),துரைராசா (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் நல்லதம்பி (கிளை முகாமையாளர், பச்சிலைப்பள்ளி ப.நோ.கூ. சங்கம்), வாணி (ஆசிரியர் - கச்சாய் அ.த.க. பாடசாலை), நந்தினி ஆகியோரின் அன்பு மாமனாரும் பகீரதன், சரளகீதா, விஜயகீதா, துசியந்தன், துசியந்தா, மகிழினி, மகிழ்நன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.08.2005) வியாழக்கிழமை பி.ப. 3 மணியளவில் அவரது தற்காலிக இல்லதில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக பாலாவித்தாழ்வு இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கச்சாய் வீதி,
கொடிகாமம். T.P.: 0777 222079
(39274) (38-12-18)
குடும்பத்தினர்.

### சுந்தரம் பசுபதி

கோணம்போவில், வல்வெட்டியை சேர்ந்த சுந்தரம் பசுபதி அவர்கள் 22.08.2005 திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் இதே இடத்தைச் சேர்ந்த சுந்தரம் - தங்கம்மா தம்பதியரின் மகனும் தவமலரின் கணவரும் திருமதி சரோஜினிதேவி (திருகோணமலை), ஸ்ரீதரன் (கனடா), திருமதி சகுந்தலாதேவி (கனடா), வசீகரன் (கனடா), பாலேஸ்வரன் (பிரான்ஸ்), திருமதி தாரணி (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் இராசலிங்கம் (திருகோணமலை), ஆனந்தன் (கனடா), திருமதி சகிதீபா (கனடா), திருமதி சுதர்சினி (பிரான்ஸ்), முருகதாஸ் (சுவிஸ்) ஆகியோரின் மாமனாரும் பிரகாஸ், பிரசாத், சுயந்தன், நர்சிகா, தர்சன், கருண், யாழினி, நிவேதா, நிருபன், மனோஜ், பானுஜா, ரக்சன் ஆகியோரின் பேரனும் அருணகிரிராசா (பிரான்ஸ்), சச்சிதானந்தம், சுந்தரலிங்கம், பொன்னம்பலம் (பிரான்ஸ்), உலகநாதன் (கனடா), திருமதி அருந்தவமலர், குமரகுரு (கனடா) ஆகியோரின் சகோதரனும் தர்மலிங்கம், திருமதி கமலாதேவி (திருகோணமலை), பஞ்சலிங்கம் (லண்டன்), இராசபூபதி (கனடா), இரத்தினகோபால் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (25.08.2005) வியாழக்கிழமை பி.ப. 4மணிக்கு அவரின் இல்லத்தில் நடபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக எள்ளங்குளம் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கோணம்போவில்,
வல்வெட்டி. (சி-44775) (38-18-12)
இ.தர்மலிங்கம் (மைத்துனர்).

### லக்சுமிகாந்தன் யசோதேவி

ஏழாலை வடக்கு, ஏழாலையை நிரந்தர வசிப்பிடமாகவும் இல.977, திருநகர் வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட லக்சுமிகாந்தன் யசோதேவி காலமானார்.

அன்னார் லக்சுமிகாந்தன் (காந்தன்orஅப்பன்) என்பவரின் பாசமிகு மனைவியும் முகுந்தன் (ஜேர்மனி), கவிதா (கவி), நிலானி (நிலா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.08.2005) வியாழக்கிழமை பிற்பகல் இரண்டு மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநகர் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மூர்த்தி
(மினிபஸ் உரிமையாளர்)
977 , திருநகர் வடக்கு.
லட்சுமிகாந்தன்
(சாந்தன் or அப்பன்- I.C.R.C சாரதி).
(சி-44776) (38-18-12)

# எத்தனை கட்சிகளுடன் கூட்டுச் சேர்ந்தாலும் ஜனாதிபதித் தேர்தலில் சு.க. வெற்றிபெறாது

## பந்துல குணவர்த்தன எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு,ஓக.25

நடைபெறப்போகும் ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க வெற்றிபெறுவது நிச்சயம். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஜே.வி.பியுடன் கூட்டுச்சேர்ந்தது போன்று இன்னும் எத்தனை கட்சிகளுடன் கூட்டுச் சேர்ந்தாலும் சுதந்திரக் கட்சியால் தேர்தலில் வெல்லமுடியாது.

இந்த அரசின் தவறான ஆட்சியின் காரணமாகவே மக்கள் அதிருப்தி அடைந்துள்ளனர். ஐக்கிய தேசியக் கட்சியிடம் ஆட்சியை ஒப்படைப்பதுதான் தற்போது வீழ்ந்துகிடக்கும் நாட்டின் பொருளாதாரத்தையும், மக்களின் வாழ்வையும் உயர்த்த ஒரேவழி என்பதை மக்கள் இப்போது நன்கு உணர்ந்துள்ளனர்.

- இவ்வாறு தெரிவித்தார் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தன. நேற்று கொழும்பில் உள்ள எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:-

இந்த அரசு பதவியேற்று மூன்று மாதத்திற்குள் ஊழியர்களின் சம்பளத்தை உயர்த்துவதாகவும், வாழ்க்கைச் செலவீனங்களைக் குறைப்பதாகவும் மக்களிடம் வாக்குறுதியளித்து ஆட்சியைக் கைப்பற்றியது. அன்று முதல் இன்றுவரை கொடுத்த வாக் குறுதிகள் எதனையும் அரசு நிறைவேற்றவில்லை.

மாறாக பொருட்களின் விலைகளை உயர்த்தி மக்கள் மீது சுமையை ஏற்றியுள்ளது. ரூபாவின் பெறுமதியை அதிகரிப்போம் என்று கூறிய அரசு அதன் பெறுமதியை மேலும் வீழ்ச்சியடையச் செய்துள்ளது.

2003இல் அமெரிக்க டொலர் ஒன்றினது இலங்கை நாணயப் பெறுமதி 94 ரூபா. சுதந்திரக் கூட்டமைப்பின் ஆட்சியில் அதன் பெறுமதி இன்னும் அதிகரித்து ஒரு டொலருக்கு 105 ரூபா 75 சதமாக இருந்தது.

அதன்பின் ஆழிப்பேரலை அனர்த்தம் ஏற்பட்டதைத் தொடர்ந்து டொலரின் பெறுமதி குறைந்து ரூபாவின் பெறுமதி கூடியது. அதன்படி ஒரு டொலருக்கு 96 ரூபா செலுத்தப்பட்டது. அப்போது வெளிநாடுகளிலிருந்து அதிகளவான பணம் இலங்கைக்கு வந்ததே இதற்குக் காரணம். இப்போது மீண்டும் ரூபாவின் பெறுமதி இறங்கி டொலரின் பெறுமதி உயரத் தொடங்கிவிட்டது. இப்போது ஒரு டொலருக்கு 102 ரூபா செலுத்தப்படுகிறது. அது 108 ரூபாவாக உயரவும் வாய்ப்புண்டு.

இலங்கை ரூபாவின் பெறுமதியைக்கூட காப்பாற்றமுடியாத அரசு எப்படி இந்த மக்களைக் காப்பாற்றப் போகிறது.

பொருள்களின் விலை உயர்ந்து செல்வதால் மக்கள் மிகவும் துன்பப்படுகின்றனர்; அதுமட்டுமன்றி அரசுமீது அதிருப்தியும் அடைந்துள்ளனர். இந்த மக்களைத் திசை திருப்புவதற்காக பால்மாவின் விலைகளையும், சமையல் எரிவாயுவின் விலையையும் அரசு தற்போது குறைத்துள்ளது. இது இப் பிரச்சினைக்குத் தற்காலிகத் தீர்வே தவிர நிரந்தரத் தீர்வல்ல. என்றார்.

### ஐரோப்பிய ஒன்றிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யிருக்கின்றனர். போர்நிறுத்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தினை நடைமுறைப்படுத்துவது தொடர்பிலும் நேற்றைய பேச்சுகளின்போது ஆராயப்பட்டதுடன், இந்த ஒப்பந்தத்தை கிரமமாக அமுல்படுத்துவது தொடர்பில் அரசே கூடுதல் கவனத்தை செலுத்தவேண்டுமெனத் தமிழ்க் கூட்டமைப்பினர் இந்தச் சந்திப்பின்போது வலியுறுத்தினர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (எ-க)

### படைமுகாமை முற்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருவருமே காணாமற்போயிருந்தனர். குறிப்பிட்ட இரண்டு மீனவர்களும் தம்மால் கைது செய்யப்பட்டதை நேற்றுக் காலை ஒப்புக்கொண்ட படையினர் சம்பந்தப்பட்ட இருவரும் உடனடியா விடுதலை செய்யப்படுவர் என்றும் மீனவர்களிடம் தெரிவித்திருந்தனர் என்று கூறப்பட்டது.

எனினும், மீனவர்கள் இருவரும் நண்பகல் வரையில் விடுவிக்கப்படவில்லை. இதனையடுத்து மீனவர்களின் விடுதலை குறித்து மீனவர் சங்கப்பிரதிநிதிகள் படையினரிடம் கேள்வியெழுப்பியுள்ளனர். அப்போது குறிப்பிட்ட மீனவர்கள் இருவரினதும் மனைவியரை குடத்தனை இராணுவ முகாமுக்கு வருமாறு படையினர் கேட்டுள்ளனர். அவ்வாறு அவர்கள் சென்ற போதிலும் குறித்த மீனவர்கள் இருவரும் விடுதலைசெய்யப்படவில்லை. இதனால் ஆத்திரமடைந்த மீனவர்கள் ஒன்று திரண்டு மணற்காடு முகாம் முன்பாக மறியல் போராட்டத்தை ஆரம்பித்தனர். வீதிக்குக் குறுக்காக மரக் குற்றிகளையும் கற்களையும் போட்டு தடைகளை ஏற்படுத்தினர்.

இது தொடர்பாக யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசச் செயலாளர் க. சூரியகுமார் யாழ். போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்குத் தெரியப்படுத்தினார். போராட்டம் இடம்பெற்ற இடத்துக்குச் சென்ற போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் யாழ். அலுவலக பதில் பணிப்பாளர் ரெவல் மெயின்ரர் பிலிப் அது தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டார்.

மீனவர் இருவரும் படையினரால் கைது செய்யப்பட்டு திருகோணமலை கடற்படைத் தளத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்றும் -

அவர்கள் இருவரும் இன்று வியாழக் கிழமை காலை விடுவிக்கப்படுவர் என்றும் - கண்காணிப்புக்குழு அதிகாரி மீனவர்களிடம் தெரிவித்தார்.

இதனையடுத்து மறியற் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த மக்கள் கலைந்து சென்றனர். (எ-9-15-70-78)

### போக்குவரத்துச் சபை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமது கருத்தை ஜனாதிபதிக்கும் நாடாளுமன்ற சபாநாயகருக்கும் அறிவிக்கிறார்கள் என்று நீதியரசர்கள் மூவரும் மன்றில் அறிவித்தனர்.

தற்போதைய கொத்தணி பஸ் நிறுவன முறையை மாற்றி மீண்டும் போக்குவரத்துச் சபை முறைமையை அறிமுகப்படுத்த அரசு தீர்மானித்துள்ளது. இது தொடர்பான சட்ட மூலம் ஏற்கனவே தயாரிக்கப்பட்டுள்ளது. கடந்த 17ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இந்தச் சட்டமூலத்திற்கு அங்கீகாரமும் வழங்கப்பட்டது.

போக்குவரத்துச் சபையை நிறுவுவதற்கான 1978ஆம் ஆண்டின் 19ஆம் இலக்கச் சட்டம், ஸ்ரீ லங்கா போக்குவரத்துச் சபையை நிறுவுவதற்கான 1991ஆம் ஆண்டின் 37 இலக்கச் சட்டம் மற்றும் தேசிய போக்குவரத்துச் ஆணைக் குழுத் திருத்தச் சட்டம் ஆகியவற்றை ரத்துச் செய்யும் வகையில் புதிய சட்ட மூலம் தயாரிக் கப்பட்டுள்ளது.

எனவே, இந்தச் சட்டமூலம் அரசமைப்புக்கு முரண்படாத வகையில், அதற்கு ஏற்புடையதாக இருக்கின்றதா என்பதை ஆராய்ந்து அறிக்கை தருமாறே ஜனாதிபதி கோரியிருந்தார். அவசரமானதும் தேசிய ஆர்வம் கருதியதுமான இந்த விடயத்தை விசாரணை செய்து உடனடியாகப் பதிலளிக்கும்படி பிரதம நீதியரசருக்கு அவர் எழுதிய கடிதத்தில் கேட்டுள்ளார்.

ஜனாதிபதியின் கோரிக்கைக்கு ஏற்ப இந்த மனுக்களை உயர் நீதிமன்றம் அவசரமாக இன்று ஆராய்கின்றது. மூன்று நீதியரசர்கள் கொண்ட குழு முன்பாக மனு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. நீதியரசர்கள் நிகால் ஜயசிங்க, ஷிராணி திலகவர்த்தன, நிமல் திஸநாயக்க ஆகியோர் விசாரணைகளை நடத்தினர். (எ-க)

### பேச்சுக்களை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால், இன்னும்இருவாரங்களில்நோர்வே தலைநகர் ஒஸ்லோவில் இந்தப்பேச்சு நடக்கும் என்ற செய்திகள் ஏற்கனவே வெளியாகி இருந்தன.

ஆனால், இந்தப் பேச்சுக்களை வெளிநாடொன்றில் நடத்துவதற்குக் கடும் ஆட்சேபம் தெரிவித்திருக்கிறது அரசு. இதனை நோர்வே அனுசரணையாளர்களூடாகப் புலிகளுக்குத் தாம் அறிவித்திருக்கின்றனர் என அமைதி முயற்சிகளில் ஈடுபடும் இலங்கை அரசின் உயரதிகாரி ஒருவர் தெரிவித்திருக்கிறார்.

அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் கொலையினை அடுத்து சர்வதேச மட்டத்தில் எழுந்திருக்கும் அவப்பெயரைச் சரி செய்வதற்காகவே, புலிகள் பேச்சினை வெளிநாட்டில் நடத்த விரும்புகின்றனர் என்று கருதப்படுவதால் அரசு இந்தத் தீர்மானத்தை மேற்கொண்டதாக அந்த அதிகாரி மேலும் தெரிவித்திருக்கிறார்.

இதேவேளை, தமது பிரதிநிதிகளின் பாதுகாப்பைக் கருத்திற்கொண்டே பேச்சுகளை வெளிநாட்டில் நடத்துவதற்குத் தமது அமைப்பு விரும்புகின்றது என்று விடுதலைப் புலிகளின் வட்டாரங்கள் கூறின.

ஐக்கிய தேசிய முன்னணி அரசின் காலத்தில் புலிகளுடன் நடத்தப்பட்ட 6 சுற்றுப் பேச்சுகளும்கூட வெளிநாடுகளிலேயே நடத்தப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.(எ-க)

### ஊடகவியலாளர்களை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆர்ப்பாட்டக்காரர்கள், தனது கமரா, கையடக்கத் தொலைபேசி, பணப்பை மற்றும் சில ஆவ ணங்கள் என்பனவற்றைப் பறித்ததுடன் தனது பாதணிகளையும் பலாத்காரமாகக் கழற்றினர் எனச் செய்தியாளர் யதுர்ஷன் சுதந்திர ஊடக இயக்கத்திற்கு தெரிவித்தார். இதுபற்றி அவர் பொலீஸ் நிலையத்திலும் முறையிட்டுள் ளார்.

ஜனநாயகமற்ற, மற்றவரின் கருத்துக்கு இடமளிக்காத ஒரு கும்பலின் இந்தச் செயற்பாட்டைத் தடுப்பதற்கு ஜே.வி.பியின் தலைவர்கள் உடனடி நடவடிக்கை எடுக்காமை விசனத்திற்கும், வெட்கத்திற்கும் உரியது. தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்குமாறும்-

பகிரங்கக் கூட்டங்களில் ஊடக மற்றும் இதர தரப்பினரை விமர்சித்து தரக்குறைவான வார்த்தைகளில் திட்டித் தீர்ப்பதை நிறுத்துமாறும் - ஜே.வி.பி. தலைவர்களிடம் சுதந்திர ஊடக இயக்கம் வேண்டுகோள் விடுக்கிறது.

-இவ்வாறு அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-க)

### இனப்பிரச்சினை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புதிய கொள்கையொன்றைத் தனது தேர்தல் அறிக்கையில் குறிப்பிடவுள்ள பிரதமர், இனப்பிரச்சினைக்கு இறுதித்தீர்வு காண்பது தொடர்பில் பல முக்கியமான யோசனைகளையும் முன்வைக்கவுள்ளார் என்றும் அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தக் கொள்கையானது அரச உயர்மட்ட அதிகாரியொருவரின் கீழ் வகுக்கப்பட்டுவருகிறது. (எ-க)

### சமாதான செயலக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குழுவின் பிரதிநிகளைச் சந்தித்துப் பேச்சுநடத்தினர் என்றும் -

இதனையடுத்து நேற்று மாலை வரை கோயில்வீதிப் பகுதியில் படையினரும் பொலீஸாரும் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்ததை அவதானிக்க முடிந்தது என்றும் - கூறப்பட்டது.

இதற்கிடையில் - சமாதான செயலக அதிகாரிகள் நேற்றுமாலை யாழ். மாவட்ட செயலகத்தில் அரச அதிபரைச்சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளனர். எனினும் இந்தச் சந்திப்பில் கலந்துரையாடப்பட்ட விடயங்கள் குறித்து அறிந்துகொள்ள முடியவில்லை. (எ)

## இன்று முதல் மறியல் என அறிவிப்பு

யாழ்ப்பாணம்,ஓக.25

யாழ்.ஊடக வளங்கள் பயிற்சிமையத்தின் பணிகளை முடக்கும் வகையில் இன்று முதல் மறியற் போராட்டம் நடத்தப்படவுள்ளது.

வட இலங்கைப் பத்திரிகையாளர் சங்கம் இதனை அறிவித்துள்ளது.

இது விடயமாக மேற்படி சங்கம் விடுத்துள்ள செய்திக்குறிப்பில்:-

யாழ்.பல்கலைக்கழக ஊடகவளங்கள் பயிற்சி மையத்தினில் பத்திரிகையாளர் மன்றம் (Press Club) ஒன்றை அமைப்பது தொடர்பாக, எமது சங்கத்தால் விடுக்கப்பட்ட கோரிக்கை தொடர்பாக திருப்திகரமான பதிலேதும் நேற்று மாலை வழங்கப்பட்டிருக்கவில்லை.

எனினும், எம்மால் வழங்கப்பட்ட கால அவகாசத்தினுள் தீர்க்கமான பதிலேதும் வழங்கப்படாமையால் ஏற்கனவே அறிவித்தது போன்று ஊடக வளங்கள் பயிற்சி மையத்தின் பணிகளை முடக்கும் வகையிலான மறியற் போராட்டத்தை இன்று காலை முதல் ஆரம்பிப்பதெனத் தீர்மானித்துள்ளோம் - என்றுள்ளது. (எ)

### செய்தியாளரைத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒளி' செய்தியாளரை மோசமாகத் தாக்கிய ஜே.வி.பியினர், அவரைப் பின்னர் கோட்டைப் பொலீஸாரிடம் ஒப்படைத்தனர். இதனையடுத்து கோட்டை பொலீஸார் செய்தியாளரைத் தடுத்து வைத்து நடத்திய நீண்ட விசாரணைகளின் பின்னர் கோட்டை நீதிவான் நீதிமன்றத்தில் நேற்று ஆஜர்செய்தனர்.

மனிதாபிமானமற்ற முறையில் தாக்குதல் நடத்தப்பட்டபோது குறித்த செய்தியாளரைத் தாம் கைதுசெய்தனர் எனவும்-

தாக்குதல் சம்பவத்தின் சந்தேகநபர்களை கைதுசெய்ய நீதிமன்ற அனுமதிதர வேண்டும் என்றும் - பொலீஸார் மன்றில் கோரிக்கை விடுத்தனர். இந்தக் கோரிக்கையை ஏற்று சந்தேகநபர்களை கைதுசெய்யுமாறும், அவர்களை மன்றில் ஆஜர்ப்படுத்துமாறும் உத்தரவிட்டார் நீதிவான். தடுத்துவைக்கப்பட்டிருந்த செய்தியாளரை 7,500 ரூபா சரீரப் பிணையில் செல்லவும் அனுமதித்தார். அத்துடன் விசாரணை அறிக்கையை மன்றில் சமர்ப்பிக்குமாறு பொலீஸாருக்குப் பணித்தார்.

இதுதொடர்பான மேலதிக விசாரணை அடுத்தமாதம் 23ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

### செய்தியாளர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வதற்கு எப்போதும் திடசங்கற்பம் பூண்ட அரசு என்ற ரீதியில், 'சுடர் ஒளி' செய்தியாளர் தாக்கப்பட்டு அவரின் பெறுமதி மிக்க பொருள்கள் சேதப்படுத்தப்பட்ட சம்பவத்தை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

செய்திகளைச் சேகரிக்க வந்தவர் சந்தேகத்திற்குரியவர் என்றால் பொறுப்பானவர்கள் இதுபற்றி பாதுகாப்புத் தரப்பினரிடம் முறையிட்டிருக்கலாம். ஆனால், இந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் சட்டத்தை தமது கையில் எடுத்துச் செயற்பட்டிருக்கின்றனர். அது தெற்கில் அரசியல் கட்சியொன்று செய்யக் கூடாத, வடக்கில் விடுதலைப் புலிகள் செய் யும் ஒரு செயற்பாடு போன்றதாகும்.

சாதாரணமான நபரொருவர் மற்றொருவரை சந்தேகநபராக அடையாளம் கண்டு தாக்குதல் நடத்துவதை ஒருபோதும் ஏற்கமுடியாது. இந்தச் சம்பவம் குறித்து ஜனாதிபதியினால் எனக்கு அறிவிக்கப்பட்டவுடன் குறிப்பிட்ட செய்தியாளரைப் பாதுகாக்க அரசு சார்பில் நடவடிக்கை எடுத்தது. செய்தியாளரிடமிருந்து பறிக்கப்பட்ட உபகரணங்கள் குறித்து முழுமையான விசாரணை நடத்துமாறு நாம் சம்பந்தப்பட்டவர்களை பணித்துள்ளோம்.

இச்சம்பவம் குறித்து 'சுடர் ஒளி' ஊழியர்களுக்கும் குறிப்பிட்ட செய்தியாளருக்கும் எமது வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

- இவ்வாறு அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-க)

## மரண அறிவித்தல்

### சண்முகம்பிள்ளை பாலசுந்தரம்

*[ஓய்வு பெற்ற முகாமையாளர், மக்கள் வங்கி]*



வேலணையூரைப் பிறப்பிடமாகவும் 20, குறோசற் ஒழுங்கை சுண்டுக்குளியை வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகம்பிள்ளை - பாலசுந்தரம் நேற்று (24.08.2005) புதன்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.08.2005)வியாழக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பி.ப. 3 மணியளவில் செம்மணி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*20, குறோசற் ஒழுங்கை, சுண்டிக்குளி.* (39275) (54-38-17-18)

*தகவல்:* திருமதி சி. பாலசுந்தரம் (மனைவி).

UNIT
Special Intel P4 package offer
All computers with 3 years complete Replacement warranty
Special offer price + Screen Filter, Dust cover, Mouse Pad & CD Cleaner
Imported special priced Compaq/ IBM PIII Tower Model with 500MHz, 600MHz, 733MHz & 1GHz
Hurry offer upto stock-in-hand only
347, K.K.S. Roacd, Manohara Theatre Junction, Jaffna
T.P: 021- 4590720

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 25.08.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.